சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

81. அங்கதன் காணும் ராவணன்

கொடுமையான கட்டுக் காவல் உள்ளது ராவணன் அரண்மனை. அந் நகரிலுள்ள இந்த அரண்மனையைப் பாதுகாக்கும் கோட்டை கொத்தளங்களும் அகழியும் சிறப்பான ஆற்றல் வாய்ந்தவை.

இலங்கைப் புறநகர்க் கோட்டை மதில் 'மேரு மலையைக் காட்டிலும் நீண்டுள்ளதோ!' என்று பிரமிக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. சூரியனும் கடந்து செல்லாத காவல் என்று திகைத்துத் திக்பிரமை கொள்ளத் தக்க நிலையில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

புற நகர்க் கோட்டை வாசலை, 'யமன் வாயோ இது!' என்று அனுமனே கருதியது போன்ற உணர்ச்சியுடன் கவி வருணித்திருக்கிறான் சுந்தர காண்டத்திலே. காவலாளிகளான அரக்கர்களின் உக்கிரமான தோற்றமும், கொலைக் கருவிகளின் கோரங்களும் அனுமனையே திகைக்கச் செய்து 'இந்தக் காவல் என்ற பெருங் கடலைக் கடப்பது அரிது' என்று எண்ணவும் செய்து விட்டது.

ஒரே அடியில் ஒரு காண்ட விமரிசனம்

இத்தகைய கட்டுக்காவல்களை யெல்லாம் அங்கதன் அநாயாஸமாக ஒரே பாய்ச்சலில் கடந்து வருவதற்கு அனுமன்தான் காரணம் என்பது கவிக் கூற்று.

அழுகின்ற கண்ண
ராகி 'அனுமன் கொல்?'
என்ன அஞ்சி

என்ற இந்த ஒரே அடி, சுந்தர காண்டத்திற்கே கதாநாயகனாகி அதிசய ஆற்றல் விளைந்த அனுமனுடைய வெற்றிச் செயல்களை யெல்லாம் நினைப்பூட்டுகிறது.

'அனுமன் தானோ!' என்று அஞ்சியவர்கள் 'அழுகின்ற கண்'களால் ஆளையே சரியாகப் பார்க்கவில்லையாம், கண்ணீர், முகம் பார்க்க முடியாமல் திரையிட்டு மறைத்துவிடுகிறது.

வாலைத்தான் பார்த்தார்கள்; 'ஐயோ அனுமன்!' என்று நெஞ்சு பறையடிக்கிறது. உடனே அழுகை வந்துவிடுகிறது. உறவினர்களையும் நண்பர்களையும் பறிகொடுத்த நினைவு ஒரே பயமாகி விடுகிறது இப்போது. பயம் உலர்ந்த கள்ளியையும் ஒரு பேயாக்கிக் காட்டி விடுமே!

அங்கதன் தன் விசைப் போக்கிலே எதிர்ப்பே இன்றி 'அரக்கனது இருக்கை'யை அடைந்துவிட்ட இரக்சியம் வெளிப்படையாகிவிட்டதல்லவா!

இப்படிச் சுந்தர காண்டத்திலே அனுமன் செலுத்திய வீர ஆதிக்கம் முழுமையும் ஒரே செய்யுளடியால் நினைவூட்டி இக் காண்டத்தை அக் காண்டத்துடன் பின்னிப் பிணையச் செய்து வாசகருள்ளத்திலே ஒருமை யுணர்வு காட்டிக் கதைப் போக்கில் ஈடுபடச் செய்வது, நிகரற்ற மகா கவித் திறனாகும். இத்தகைய கவித் திறனை வில்லி முதலான சாதாரணத் தமிழ்க் கவிஞரிடம் காணவே முடியாது.

'அழுகின்ற கண்ணராகி' அஞ்சி ஓடியவர்களும் அங்கதன் வந்து சேரும் இடத்திற்கே வந்து விடுகிறார். வந்து, ராவணனைச் சுற்றிக் கொள்ளுகிறார்கள்; வணங்கி அபயம் வேண்டுகிறார்கள்.

அவசர தர்பார் (அவதானம் செய்யும் அரக்கன்)

இப்போது நடக்கும் ராவண தர்பாரில் இது ஒரு பக்கத்துக் காட்சி. வேறொரு

பக்கத்தில், படைத் தலைவர்களான உத்தியோகஸ்தர்கள் அவசரமாகச் செய்திகளை இருபது செவிகளிலும் போடுகிறார்கள்.

கண்ணெதிரே, சேனை போருக்கு எழுகின்ற அதி தீவிர முயற்சியும் நடைபெற்றுக் கொண்டு தானிருக்கிறது. அதையும் இருபது கண்கள் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றன.

கள்ளனை வரவு
நோக்கி நின்றனன்,
காண்கிலாதான்

என்று அப்போது தெரிவித்த கவிஞன், இப்போது ராமனால் காண முடியாத 'போர்ப் பெரு முயற்சி' என்ற காட்சியை 'இதோ பாருங்கள்' என்று சற்றுக் காட்டுகிறான். பிறகு தூது வரலாற்றிலேயே நமது கவனம் முழுவதையும் திருப்பி விடுகிறான்.

மேலே சொன்ன நிலையில், ராவணன் போர் முயற்சிகளுக்குக் கண்ணால் அங்கீகாரம் அளித்தும், ராணுவ அதிகாரிகளின் அறிக்கைகளுக்குச் செவி சாய்த்தும், அஞ்சி வந்தவர்களுக்கு மௌன அபயம் கொடுத்தும், பல அவதானங்களை ஒருங்கே புரிபவன் போலக் காணப்படுகிறான்.

இதே சமயம் அங்கதனும் மட மடவென்று பிரவேசித்து ராவணனைப் பார்த்து விடுகிறான் :

அழுகின்ற கண்ணை—
ராகி 'அனுமன்
கொல்?'
என்ன அஞ்சி,

தொழுகின்ற சுற்றம்
சுற்றச், சொல்லிய
துறைகள் தோறும்

மொழிகின்ற வீரர்
வார்த்தை முகந்
தொறும்
செவியில் மூழ்க,

எழுகின்ற சேனை
நோக்கி இசைந்
திருந் —
தானைக் கண்டான்.

[சுற்றம் – தன் இனத்தவர். சொல்லிய துறைகள் தோறும் – போருக்கென்று சொல்லப்பட்டுள்ள அந்த அந்தத் துறைகளிலே. மொழிகின்ற வீரர் வார்த்தை – அதிகாரிகளாக அமைந்திருக்கும் தலைமை வீரர்கள் சொல்லும் செய்திகள்.]

ஒரே அதிசயம்

ராவணனை இப்போது இந்த நிலையில் பார்க்கும் அங்கதனுக்கு ஒரே அதிசயம் தான். 'இந்த ராவணனையாவது, எதிர்த்து நிற்பதாவது — அரிய காரியம்!' என்ற எண்ணங்கூட உண்டாகிறது.


'கடலிலே அணை கட்டிய அந்தப் பராக்கிரம மெல்லாம் போதுமா!' என்று தோன்றுகிறது. ராவண பராக்கிரமத்திற்கு எதிராக ராம பராக்கிரமம் இருக்கிறதே என்ற ஆறுதல் ஒன்றுதான் இப்போது :

'கல்லுண்டு, மரமுண்(டு);
ஏழைக் கடல்ஒன்றும்
கடந்தேம் என்னும்
சொல்லுண்டே; இவனை
வெல்லத் தோற்றத்தோர்
கூற்றம் உண்டோ?
எல்லுண்ட படைகைக்
கொண்டால், எதிர்உண்டே?
இராமன் கையில்



வில்லுண்டேல் உண்(டு)'
என்(று)
எண்ணி ஆற்றலை
வியந்து நின்றான்.

[ஏழைக் கடல் ஒன்றும் – நாங்கள் போட்ட கல்லு மரங்களால் தூர்ந்து போகும்படி அவ்வளவு வலிமைக் குறைவுள்ள கடல் ஒன்றையும். கடந்தேம் – கடந்தோம். தோற்றத்து ஓர் கூற்றம் உண்டோ – தோன்றியுள்ள ஒரு யமனும் உண்டோ. எல் உண்ட படை– ஒளி பொருந்திய ஆயுதத்தை. கைக்கொண்டால்–ராவணன் கையில் கொண்டு போருக்குக் கிளம்பி விட்டால். எதிர் உண்டே – எதிராக நிற்கும் படையும் உண்டோ. வில் உண்டேல் – வில் எதிராகத் தோன்றுமானால்.]



சுக்கிரீவன் சாகஸம்

இப்படி ராவண பராக்கிரமத்தை வியந்து கொண்டிருக்கும்போதே அண்மையில் எதிர்த்து நின்ற சுக்கிரீவ பராக்கிரமும் நினைவிற்கு வருகிறது:

'அணிபறித்(து) அழகு
செய்யும் அணங்கின்மேல்
வைத்த காதல் –
பிணிபறித்(து) இவனை
யாவர் முடிப்பவர்?
படிக்கண் பேழ்வாய்ப்
பணிபறித்(து) எழுந்த
மானக் கலுழனின்,
இவனைப் பற்றி
மணிபறித்(து) எழுந்த
எந்தை யாரினும்
வலியன்!' என்றான்.

[அணி பறித்து அழகு செய்யும் அணங்கு – அணி கலங்களைப் பூட்டிக்கொள்ளாமலே அழகு செய்யும் தெய்வப் பெண் போன்ற சீதா பிராட்டி. காதல் பிணி – காதலாகிய நோய். பிணி பறித்து – பிணியைப் போக்கி. படிக்கண் – இந்தப் பூமியிலே. பேழ்வாய்ப் பணி – பிளவுபட்ட வாயையுடைய சர்ப்பம். மானக் கலுழனின் – பெருமையைக் கொண்ட கருடனைப் போல. மணி பறித்து எழுந்த – மகுடத்திலிருந்த இரத்தினங்களைக் கவர்ந்து வந்த. எந்தை– எனது சிறியதந்தையாகிய சுக்கிரீவன்.]

'அணிபறித்து அழகு செய்யும் அணங்கு' என்பது சீதா பிராட்டியின் நிகரற்ற பேரழகைச் சுட்டிக் காட்டுகிறது. அணி, மாதர்களை அழகு செய்கிறது என்று சாதாரணமாய்க் கூறுவதுண்டு. தேர்ந்தெடுத்து அணிந்து கொள்ளும் அணிகள் அழகை எடுத்துக் காட்டுகின்றன என்பது உண்மை. இத்தகைய அணிகளும் பிராட்டியின் அழகை மறைப்பனவே என்பது இங்கே கவிஞன் குறிப்பாக உணர்த்தும் பேருண்மை.

இத்தகைய பிராட்டி மீது காதற் பிணி கொண்டிருந்த ராவணனைக் கருடன் பாம்பைப் பற்றுவது போலச் சுக்கிரீவன் பற்றிக் கொண்டு மகுடமணிகளைப் பறித்து வந்த அந்தப் பராக்கிரமத்தை இப்போது கொண்டாடுகிறது அங்கதன் மனோபாவம்.

இவ்வகையான எண்ணங்களை நிரம்ப எண்ணி அங்கதன் ராவணன் எதிரே செல்லுகிறான். எனினும் இவன் அவனுடைய எதிரே சென்று நெருங்கி நிற்கும் வரை அந்த ராவணன் இந்த அங்கதனைக் கவனித்ததாகவே தெரியவில்லை.

அப்படி ஈடுபட்டிருக்கிறான் ராவணன்—எழுகின்ற சேனை வீரர்களைக் கடாட்சித்து இசைவு தெரிவிப்பதும், படைத் தலைவர்களின் செய்திகளைக் கேட்பதும், அஞ்சித் தொழுகின்ற சுற்றத்தாருக்கு மௌன அபயம் அளிப்பதும் ஆகிய செயல்களிலே.

இந்த மூன்று காரியங்களையும் சமாளித்துக் கொண்டே ஒரே சக்திமயமாக அங்கதனும்வியந்து நோக்கும் நிலையில், சக்கரவர்த்தி – மாட்சியும் மிடுக்கும் தோன்ற வீற்றிருக்கிறான்.

இந்த மாட்சியை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது கவிஞனது சப்த சித்திரம்:

> **கடுங்கனல் விடமும்**
> **கூற்றும் கலந்து,கால்**
> **கரமும் காட்டி,**
>
> **விடும்சுடர் மகுடம்**
> **மின்ன, விரிகடல்**
> **இருந்த தென்னக்**
>
> **கொடுந்தொழில் மடங்கல்**
> **அன்னான்.**

[விடம் – விஷம். கூற்று – யமன். விரி கடல்–விரிந்து பொங்கிப் பரவி வரும் கடல். கொடுந் தொழில் மடங்கல் அன்னான் – கொடுமையான தொழிலைக் கொண்ட ஆண் சிங்கத்தை ஒத்த ராவணன்.]

கடுங்கனல், கொடிய ஆற்றலுக்கு அறிகுறி. ஓர் விஷம் குளிர்ந்து கொல்லும் வஞ்சகத்தின் நினைவுக் குறி. கொடிய சக்தியும் வஞ்சனையும் கொலையும், உருவமாகி ராவண சக்கரவர்த்தியாகச் சமைந்திருக்கிறதாம்.

நெப்போலியன் என்ற வீர மன்னனது மிடுக்கையும் மாட்சியையும் பேராச்சரியத்துடன் வருணித்த மேலை நாட்டறிஞர் ஒருவர், 'சக்தியும் கொலையும் கலந்து உருப்பெற்ற சக்கரவர்த்தி–மாட்சிதான் நெப்போலியன்!' என்றார். கம்பன் கலைத் திறனோ, கொடிய சக்தியோடும் கூற்றின் கொலைத் திறனோடும் வஞ்சனையையும் கூட்டிக் குழைத்து ராவணாகாரமாய்க் காலும் கையும் வகுத்து உருவம் பிடித்து வைக்கிறது!

இந்த உருவத்திலே முகத்தைக் காட்டாமலே மகுடத்தைச் சுடர் வீசி மின்னச் செய்திருப்பது கவனிக்கத் தக்கது. முகத்தைக் கூசாது பார்ப்பதுதான் சாத்தியமா? அங்கதனும் சற்றுக் கூசிக் குறுகி நின்று பிறகு தானே சமாளித்துக் கொள்கிறான்!

கடுங்கனலும் விடமும் கூற்றும் கலந்த ஓர் உருவத்தின் முடியிலேதான் மகுடம் சுடர்கின்றதா? அல்லது கொந்தளிக்கும் கருங் கடலேதான் சுடர்மகுடம் மின்ன இப்படி வந்து கொலுவிருக்கின்றதா?

> **விடுஞ்சுடர் மகுடம்**
> **மின்ன, விரிகடல்**
> **இருந்த தென்ன**

என்ற அடியை ஓதி ஓதிப் பாருங்கள்!

சுந்தர காண்டத்திலே அனுமன் கட்டுண்டு ராவண தர்பாருக்குக் கொண்டு வரப்பட்டபோது வருகிற

> **புவித்தடம் படர்**
> **மேருவைப் பொன்முடி**
> **யென்னக்**
>
> **கவித்து மாலிருங்**
> **கருங்கடல் இருந்தது**
> **கடுப்ப**

என்ற கொலு வருணனை இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

அந்தக் கருங்கடல் இப்போது மேலும் அதிகமான கொந்தளிப்புடன் — பேய்க் காற்று வீசிச் சுழன்றடிக்க அலைபடுகின்ற கொந்தளிப்புடன்—காணப்படுகிறது. அங்கே 'கருங்கடல் இருந்தது' என்று சொன்ன கவி இங்கே

> **விரிகடல் இருந்தது**

என்று கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது.

பாட்டை ஓதி ஓதி உணரும்போது, 'விரிந்து பரந்து "உலகத்தையே அழித்து விடுவோமா!" என்று வெள்ளமிடப் போகும் கடல்' அகக் கண்ணுக்கு இலக்காகி விடுகிறது.

கடைசியாக அவ்வளவு கொடுமையையும் பயங்கரத்தையும் அளவு படரும் காட்சிக்கு உட்படுத்துவதற்காக,

> **கொடுந்தொழில் மடங்கல்**
> **அன்னான்**

என்று, இரைமேல் பாயப் போகும் சிங்கத்தைக் கவிஞன் நினைவூட்டுகிறான்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

82. சிரிப்பும் எதிர்ச் சிரிப்பும்

கதை எழுதுவோரில் சிலர் கதாபாத்திரங்களின் நடை உடை பாவனைகளை வருணித்து நம் கண்முன் அப்படியே தோன்றச் செய்கிறார்களல்லவா ? 'என்ன இயற்கைச் சித்திரம் !' என்று நாம் அதிசயிக்கும்படி அவ்வளவு நுட்பமான விவரங்களையும் இந்த ஆசிரியர்கள் தருவது உண்டு.

'உற்றுப் பார்க்கும் ஆற்றலைத்தான் இவர்கள் எப்படிப் போற்றி வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் !' என்ற அதிசயமும் வாசகர்களுக்கு ஏற்படுகிறது.

பேரனும் பாட்டியும்

தலைப்பாகை, சொக்காய், மேலாடை இவற்றையெல்லாம் பொருத்தமான விவரங்களுடன் வருணிக்கலாம் ; தோற்றம் குறித்தும், பேசும் விதம், நடக்கும் விதம் முதலான விவரங்கள் குறித்தும், வியக்க வியக்க எழுதி ஸ்தூல மனிதனை நிழற் படமாக எழுத்திலே காட்டி விடலாம். ஆனால் இத்தகைய வருணனைகள் போதுமா, கதாபாத்திரங்களை உயிரோவியமாகக் காட்டுவதற்கு ?

ஸ்தூல விவரங்களில், பொருள் பொதிந்தனவும் பொருள் புதைந்தனவுமாகிய சிலவற்றைக் காட்டுவதேபோதும். சொக்காயிலிருந்தோ, மேலாடையிலிருந்தோ வருணிக்கத் தொடங்கி ஆத்மாவின் போர்வையாகிய உருவத்தைக் கட்புலனாக்கி விட்டால் எதார்த்த மனிதனைக் காட்டியதாகாது.

எனவே, ஷேக்ஸ்பியர் கம்பன் முதலான மகாகவிகள், இதயத்திலிருந்தே கதாபாத்திர சிருஷ்டி செய்யத் தொடங்குகிறார்கள். இத்தகைய ஓர் உயிர்ச் சித்திரம் தான்,

> கடுங்கனல் விடமும்
> கூற்றும் கலந்து,கால்
> கரமும் காட்டி
> விடுஞ்சுடர் மகுடம்
> மின்ன, விரிகடல்
> இருந்த தென்னக்,
> கொடுந்தொழில் மடங்கல்
> அன்னான்

என்ற ராவண – சித்திரம்.

எத்தனையோ பாடல்களில் நீளப் பார்த்து ராவணனுடைய முழுச் சித்திரத்தையும் அந்த ஆகிருதியுடன் மனக்கண் முன் இதுவரை நாம் கண்டு வந்திருக்கிறோமல்லவா ? அதே முழுச் சித்திரத்தைக் குறையும் இன்றி, மிகையும் இன்றி ராவணாகாரமாகவே ஒரு சின்னஞ் சிறு சித்திரமாக இங்கே பார்க்கிறோம்.

ஆள் உயரத்தில் எழுதிய பெரிய சித்திரத்தை ஒரே இடத்தில்தான் வைத்திருக்க முடியும் ; சின்னஞ் சிறு சித்திரத்தையோ எங்கும் நம்முடன் கொண்டு செல்லலாம். இந்தச் சின்னஞ் சிறு ராவண சித்திரம் வசீகரமாக நினைவில் கொள்ளத் தக்கது.

சொற்களை மறந்தாலும் இதன் ஓசையே உள்ளத்தில் தங்கி, ராவண குணாதிசயம் காவியமெங்கும் வளர்ந்து வருவதைப் பரிசிலனை செய்து பார்க்கப் பயன் படுவதாகும்.

'கடுங்கனல் விடமும் கூற்றும்' என்று தொடங்கும் இச்செய்யுளடிகளை ஓத ஓத, இவற்றிலுள்ள வல்லோசைகள் எப்படி இந்த ஓசைச் சித்திரத்தை

ராவண சித்திரமாக்குகின்றன என்பது புலனாகும். இந்த மாதிரி வல்லோசைகளின் பொலிவினால் தாடகை—சித்திரம் பாலகாண்டத்திலே உருவாக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

தாடகையைக் குறித்துப் பேசிக் கொண்டே வந்தவர்கள் அவள் இருப்பிடத்திற்கே பேச்சுப் பராக்கில் வந்து சேர்ந்தார்கள். அவளும் நெருப்பைக் கக்கிக் கொண்டு நடமாடும் எரிமலைபோல் எதிர்கொண்டு வந்தாள்.

அந்த வருகையை வருணிக்கும் கவி, 'இறைக்கடை துடித்த புருவத்தள்' என்று தொடங்குகிறது. இப்படித் தொடங்கும் இரண்டு பாடல்களிலும் வல்லோசைகள் குதி போட்டு ராவணனைப்பற்றிய இப் பாட்டின் அமைப்பை நினைவூட்டுகின்றன.

'தாடகை வதைப் படல'த்திலுள்ள அந்த இரண்டு பாடல்களையும் இப் பாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்; ஒப்பிட்டு உறவு பார்க்கலாம்.

பாலகண்டத்திலுள்ள அப்பாடல்களையும், யுத்த காண்டத்திலுள்ள இப்பாட்டையும் ஓதி ஒப்பிடும்போது, 'பாட்டியின் முகஜாடை பேரனிடத்திலும் காணப்படுகிறதே!' என்ற அதிசய உணர்ச்சி ரசிகருள்ளத்தில் ஏற்படும்!

அதட்டும், சிரிப்பும்

இனி, நாம் கதைப் போக்கைத் தொடர்ந்து செல்வோம். பிரதாப லங்கேச்வரனுடைய எதிரே சென்று குறுகி நின்றவன் கொஞ்சமும் அஞ்சிக் குறுகிப் போய் விடவில்லை! அந்த ராட்சஸ உயரத்தோடு ஒப்பிடக் குறுகி நின்றவன் தான்!

ராவணனைக் கிட்டி நிற்பதே 'இந்த இளங்கன்று பயம் அறியாததே!' என்பதைப் புலப்படுத்துகிறது.

பிறகு என்ன நடக்கிறது? முன் கூட்டிச் சொல்லி அனுப்பி அனுமதி பெற்றுக் கொள்ளாமல் 'திடுதிம்' என்று இப்படி நெருங்கி வந்து நிற்கும் இவனிடம் ராவணன் எப்படி நடந்து கொள்ளப் போகிறான்?

பயந்து வந்தவர்கள் ஒருபுறம்; செய்தி சொல்லும் உத்தியோகஸ்தர்கள் ஒரு புறம்; போருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் சேனை ஒருபுறம்— இவ்வளவு நெருக்கடி தர்பார் நடத்திக் கொண்டிருக்கும் ராவணேச்வரனைச் சமயம் அறியாமல், சந்தர்ப்பம் பாராமல் நெருங்கிவிட்ட குரங்கு மீது அரக்கனுக்கு எவ்வளவு கோதிப்பு ஏற்பட்டிருக்கும்!

அந்த அரக்கர்—கூட்டத்தைத் தானும் நெருக்கித் தள்ளிவிட்டு அவசர அவசரமாய்ச் சக்ரவர்த்தி முன் போய் நின்ற அங்கதனை ராவணன் பார்க்கும் பார்வையும், இவனிடம் அவன் பேசும் பேச்சும் அது கேட்ட அங்கதன் நிலையும் ஒரே பாட்டில் நெருங்கிக் காண்கின்றன:

> நின்றவன் தன்னை
> அன்னான் நெருப்பெழ
> நிமிரப் பார்த்(து),'இங்கு
>
> இன்(று)இவண் வந்த
> நீயார்? எய்திய
> கருமம் ஏது?
>
> கொன்(று)இவர் தின்னு
> முன்னம் கூறுதி
> தெரிய' என்றான்;
>
> வன்திறல் வாலி
> சேயும் வாளெயி(று)
> இலங்க நக்கான்.

[அன்னான் — அந்த ராவணன். இவண் — இவ்விடத்தில். கூறுதி — கூறு



வாய். வன்றிறல் வாலி சேய் — மிக்க வலிமையுள்ள வாலி குமாரன். வாள் எயிறு — ஒளியுள்ள தன் பற்கள். இலங்க—விளங்க. நக்கான் — சிரிக்கலானான்.]

ராவணனுடைய தோற்றத்தை அவன் தர்பார் நடத்தும் ஆற்றலுடன் பார்த்ததும், அங்கதன் வியந்து நின்றானல்லவா? 'இவனை வெல்வது எப்படி!' என்று கூடச் சற்றுப் பிரமித்து நோக்கினானல்லவா? அவ்வளவு பிரமிப்பும் ஒரு நொடியில் பறந்து விட்டது ராவணன் வாய் திறந்து பயமுறுத்தியதும்!

வாயைத் திறந்ததும், 'ஐயோ, இவ்வளவு அசடா



இந்த ஆர்ப்பாடக்காரன்!' என்ற நினைப்பும் உண்டாகி விட்டது. அவன் அதட்டிக் கேட்டது அசட்டுத் தனத்தை அதிகமாக்கியே காட்டியது அங்கதனுக்கு.

ராவணன் பயமுறுத்தினானே,
கொன்றிவர் தின்னா
முன்னம் கூறுதி

என்று இதுதான் அங்கதனுடைய பெருஞ் சிரிப்பிற்கு இலக்காகிறது.

'கொல்லுகிறதாவது, என்னைத் தின்னுகிறதாவது! அவ்வளவு ஜீர்ண சக்தியா இந்தப் பிணந் தின்னிகளுக்கு!' என்ற நினைப்பு வாலி மகனைச் சிரிக்கச் செய்து விட்டது.

பல்லெலாம் தெரியக் காட்டி நகை புரிந்தவன் திடீரென்று சிரிப்பை அடக்கிக் கொண்டு, தன்னை ராமதூதன் என்று தெரிவித்துக் கொள்கிறான். இப்போது எவ்வளவு பக்தி! என்ன விசுவாசம்!

ராவணனுடைய மிடுக்கிற்கும்! துடுக்கிற்கும் பளிச்சென்று ஒரு சூடு கொடுப்பது போன்ற வாக்கு:

'பூதநா யகன், நீர்
சூழ்ந்த புவிக்குநா
யகன், இப் பூமேல்
சீதைநா யகன், வே(று)
உள்ள தெய்வநா
யகன், நீ செப்பும்
வேதநா யகன், மேல்
நின்ற விதிக்கும்நா
யகன்தான் விட்ட
தூதன்யான், பணித்த
மாற்றம் சொல்லிய
வந்தேன்' என்றான்.

[பூத நாயகன் — பஞ்ச பூதங்களுக்கும் தலைவன்: புவிக்கு — பூமிக்கு. இப்பூமேல் — இப்பூமி மீது தோன்றியுள்ள. வேறுள்ள தெய்வநாயகன் — வெவ்வேறாக வழங்குகிற தெய்வங்களுக்கெல்லாம் தலைவன். செப்பும் — ஓதுகிற. பணித்த மாற்றம் — என் தலைவன் கட்டளை யிட்டிருக்கும் சொல்லை. சொல்லிய — சொல்லும் பொருட்டு.]

'இன்று இவண் வந்த நீ யார்? எய்திய கருமம் ஏது?' என்ற இரண்டு கேள்விகளுக்கும் தன்னை ராம தூதன் என்று அறிவித்துக் கொள்ளும் ஒரே வார்த்தையில் வெகு சாமர்த்தியமாக விடை தருகிறான் அங்கதன்.

'சீதை நாயகன்' என்று ராமனைக் குறிப்பிடுவதிலேயே வந்த காரியத்தைக் குறிப்பாகத் தெரிவித்து விடுகிறானல்லவா?

'புவிக்கு நாயகன்' என்று ராமனைக் குறிப்பிடுவதில், எந்தச் சக்கரவர்த்தியும் புவிக்கு நாயகனில்லை; இறைவனே பூமிக்கெல்லாம் தலைவன் என்பது குறிப்பு.

'நீ செப்பும் வேதநாயகன்' என்பதில் ராவணன் வேதம் தெரிந்தவனாக இருந்தும் வேதப் பொருளை உணர்ந்து கொள்ளவில்லை என்பது குறிப்பு.

ராவணனுக்கு விஷயம் நன்றாக விளங்கி விட்டது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அங்கதன் வந்து நின்றதுமே புத்திசாலியான ராவணன் விஷயத்தை நன்குணர்ந்து கொண்டான் என்று தான் கருத வேண்டும்.

கேள்வி கேட்டது விஷயம் தெரிந்து கொள்வதற்காக அல்ல; அங்கதனைப் பயமுறுத்துவதற்காகத் தானே? அங்கதனை ராவணன் வாலி மகனென்று தெரிந்து கொள்ளாத நிலையில், இவன் அனுமனில்லை யென்று தெரிந்து கொண்ட நிலையில், பயமுறுத்தவே எண்ணினான் என்பதில் ஐயமில்லை.

அரக்கனும் சிரிக்கிறான்

இந்த அசட்டுத்தனத்தைக் கண்டு அங்கதனுக்குச் சிரிப்பு வந்து விட்டதல்லவா? இந்தச் சிரிப்பை ராவணன் எப்படிப் பொறுப்பான்? தானும் ஓர் எதிர்ச் சிரிப்புச் சிரிக்க விரும்பினான்.

அங்கதன் சிரித்து விட்டுப் பேசினான். ராவணனோ பேசி விட்டுச் சிரிக்கிறான்:

'அரன்கொலாம்? அரிகொ
லாம்? மற்(று) அயன்கொ
என்பார் அன்றிக், [லாம்?
குரங்கெலாங் கூட்டி
வேலைக் குட்டத்தைச்
சேது கட்டி,
"இரங்குவா னாகில்,
இன்னம் அறிதி!" என்(று)
உன்னை ஏவும்
நரன்கொலாம் உலக
நாதன்?' என்றுகொண்(டு)
அரக்கன் நக்கான்.

[அரன்கொலாம் — சிவபெருமானோ. அயன்கொலாம் — பிரமன்தானோ. என்பார் அன்றி — என்று மும்மூர்த்திகளாக வழங்கும் அவர்களன்றி. வேலைக் குட்டத்தை — குட்டை போலுள்ள சமுத்திரத்தை. இரங்குவானாகில் இன்னம் அறிதி — இப்போதாவது ராவணன் இரக்கம் கொள்வானாகில் போய் அறிந்துவா.]

'பூதநாயகன்' என்று அங்கதன் தொடங்கியதிலிருந்து மும்மூர்த்திகளில் ஒரு மூர்த்தியைத் தான் குறிப்பிடுவானென்று எதிர்பார்த்தானும் ராவணன். அந்த மூர்த்திகளையும் ராவணன் மதிக்கவில்லை யென்பது பிரசித்தம்.

'உலகநாதன் என்று அவர்களில் ஒருவனைக் குறிப்பிடாமல் கேவலம் நரமனுஷ்யன் ஒருவனை நரை திரை நோய்த்தல் சாதல் என்ற அவஸ்தைகளுக்கு உட்பட்டவனை — அப்படிப் புகழ்ந்து விட்டாயே!' என்கிறான்.

'அந்த மனுஷ்யன் அவனைப் போன்ற மனிதர்களையாவது படைத் துணையாகப் பெற்றிருக்கிறானா? குரங்குகளை யல்லவா படைகளாகத் திரட்டி வந்திருக்கிறான்!' என்கிறான். இவர்கள் சேது கட்டிய சமுத்திரத்தைக் 'குட்டம்' என்கிறான்.

இப்படி யெல்லாம் சொல்லி எதிர்ச் சிரிப்புச் சிரித்து விடுகிறான் ராவணன்.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

83. பேச்சுப் போட்டி

பேச்சும் கலைதான்; மௌனமும் கலைதான். இரண்டும் சேர்ந்து ஒரே கலையாக அமைவதும் உண்டு.

மொழியால் சொல்ல முடியாததையும் மௌனத்தால் உரைத்துக் காட்ட இயலும் என்பர். சாட்சி தட்சிணாமூர்த்தி.

சொல்லம்பைச் சரியான வாய்ப்பு அறிந்து பிரயோகித்துவிட்டு மௌனமாயிருந்து விடத் தெரியுமானால், அவனே பேச்சுக் கலைஞன் எனக் கருதலாம்.

சம்பாஷணையும் ஒரு கலைதான். சில அம்சங்களில் பந்தாடலை ஒத்தது இவ்வுரையாடல். இதைப் பேச்சுப் போட்டி முறையில் நடத்தி வெற்றி காண்பவரும் உண்டு.

இனி, அங்கதன் ராவணனோடு எப்படிப் பேச்சுப் போட்டியில் வெற்றி பெறுகிறானென்பதைப் பார்க்கலாம். உரையாடலை ஒரு கலையாகப் பயின்று தேர்ச்சி பெற்றிருப்பவன் அங்கதன் என்பதை இக்கட்டுரையில் நாம் தெரிந்துகொள்ளப் போகிறோம்.

ஆன்றமையாகிய தூதனது வீரத்திலே ஒரு முக்கிய அம்சம் பேச்சுத் திறன் என்பதில் ஐயமில்லை.

மாருதி அல்லன்
ஆகில் நீ

என்று ராமன் அங்கதனை நோக்கிச் சொன்னானல்லவா! வீரத்தில் மட்டுமல்ல, சொல்லின் திறமையிலும் மாருதிக்கு அடுத்த படியில் அங்கதன் இருப்பதாகவே மதித்துத்தான் இவனைத் தூதனாக ராமன் தேர்ந்தெடுத்தான் எனக் கருதலாம்.

வியப்பு இகழ்ச்சியாகிறது

மௌனமாக மூவகை நிகழ்ச்சிகளையும் ஒருங்கே சமாளித்துக் கொண்டிருந்த ராவணனைக் கண்ணுற்றதும் அங்கதன் வியந்து நின்றான், ஆனால் வாய் திறந்து ராவணன் அதட்டியதும் வியப்பு அடங்கி, 'அட, இவ்வளவுதானா!' என்ற உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது அங்கதனுக்கு.

அங்கதனுக்குச் சிரிக்கவும் தெரியும். பக்தியுடன் பேசவும் தெரியும். ராவணன் அதட்டலுக்குப் பதில் சிரிப்பு. கேள்விக்கு விடை: பய பக்தியுடன் ராமன் பெருமையை அறிவித்து அவன் தூதன் என்று தன்னை அறிவித்துக் கொண்டது.

ராவணனுக்கோ இப்படி உணர்ச்சிகள் பணி செய்ய உரையாடத் தெரியவில்லை. சிரிக்கத் தெரியும்; சீறிப் புகைந்து கனற்பொறிகளை வீசுவது போல வார்த்தைகளை வாரி இறைக்கத் தெரியும்.

உலகங்களுக் கெல்லாம் சர்வாதிகாரி மீது சர்வாதிகாரம் செலுத்துகிறது உணர்ச்சிவெறி. இந்த ராமதூதனோ உணர்ச்சியின் வசானை விட்டு விடுவதேயில்லை.

அங்கதன் சிரிப்பிற்கு ராவணன் பளிச்சென்று எதிர்ச் சிரிப்புச் சிரித்து விடுகிறான். அதற்கும் மேலாக ஒரு சிரிப்பைத் தானும் சிரித்துவிட வேண்டுமே என்பதற்காக அங்கதன் ஆத்திரப்படவில்லை. பதறாது சிதறாது சொல்லம்புகளைக் குறி பார்த்துப் போடுகிறான்.

'நரமனுஷ்யனா, உலகநாதன்!' என்று சிரித்த அரக்கன்,

கங்கையும் பிறையும்
சூடும் கண்ணுதல்,
கரத்து நேமி
சங்கமும் தரித்த
மால்,மற்(று) இந்நகர்
தன்னைச் சாரார்!

[கண்ணுதல் – நெற்றிக் கண்ணனாகிய சிவபெருமான். கரத்து – கையில். நேமி – சக்கரம். மால் – திருமால். சாரார் – வந்து சேர மாட்டார்கள்.]

என்று தன் நகரத்தின் கட்டுக் காவலைப் பட்டோபமாகத் தெரிவித்துக் கொண்டான் அங்கதனிடம்.

ஆனால் அத்தகைய கட்டுக் காவல்களை அனாயாசமாக மீறிக் கொண்டு வந்திருப்பவன் சாமானியனாக இருக்க முடியுமா என்பதை ராவணன் சிந்தித்துப் பார்க்கவே யில்லை. சிந்தித்துப் பார்க்க அவகாசமும் இல்லாதபடி ஆத்திரம் கொண்டு பேசுகிறான் அங்கதனோ, 'சிந்தனை முன்னே, வார்த்தை பின்னே' என்ற முறையில் தெளிந்து பேசுகிறான்.



'சிவபெருமானும் திரு நெடுமாலும் அஞ்சி உட்புகாதிருக்கும் நகரத்திலே நர மனுஷ்யனுக்காக வந்து சேர்ந்திருக்கும் தூதனே! அந்த மனிதனைத் தெரிந்து கொண்டேன்; அவனுக்காக அஞ்சாது தூது வந்த நீ யார்?' என்று கேட்கிறான் ராவணன்.

'அங்(கு) அவர் நிலைமை
நிற்க, மனிசனுக்
காக அஞ்சா(து)
இங்குவந்(து) இதனைச்
சொன்ன தூதன் நீ
யாவன்?' என்றான்

[அங்கு அவர் – சிவனும் விஷ்ணுவுமான அவர்கள்.]

ராமதூதன் என்று முதன் முதல் அறிவித்துக் கொண்ட அங்கதன் இப்போது தன்னை வாலி மகன் என்று தெரிவித்துக் கொள்ளப்போகிறான்.

இந்த தர்பாரில் வாலியை நினைவூட்டுவது ராவணனுக்கு அவமானம் தான்; ராவணனைச் சபை சிரிக்க வைப்பது தான்; ஆனால் அந்த வாலி – ராவண நிகழ்ச்சியை அங்கதன் நினைப்பூட்டுவதே எவ்வளவு பரிகாசத்திற்கு ஏதுவாகிறது பாருங்கள்!

'வாலி என்று ஒருவன்' என்பதை மறைவாகச் சொல்லி விட்டு, 'அந்தக் காலத்திலே ராவணன் என்று தன்னைச் சொல்லிக் கொண்டவனை அவன் என்ன செய்தான் தெரியுமா!' என்று அந்தக் காட்சியை அப்படியே ஒரு சொற்சித்திரமாக்கி விடுகிறான்,

சுந்தரத் தோள்க
ளோடும் வாலிடைத்
தூங்கச் சுற்றி
[தூங்க – தொங்க.]

என்ற செய்யுளடியிலே.

வாலி, வால், அதிலே தொங்கும் தோள்கள் — என்ன அழகு! சுந்தரமாய்த் தொங்குகின்ற தோள்கள், செயல் மறந்து!

இந்தச் சொற்சித்திரத்தோடு கூடிய பாட்டு:

'இந்திரன் செம்மல்,
பண்(டு) ஓர் இராவணன்
என்கின் றானைச்

சுந்தரத் தோள்க
ளோடும் வாலிடைத்
தூங்கச் சுற்றி,

சிந்துரக் கிரிகள்
தாவித் திரிந்தனன்,
தேவர் உண்ண

மந்தரப் பொருப்பால்
வேலை கலக்கினான்
மைந்தன்' என்றான்,

[இந்திரன் செம்மல்—இந்திர குமாரனை வாலி. பண்டு—முற்காலத்தில். தூங்க—செயலற்றுத் தொங்க. சிந்துரம்—செங்காவி, யானை, புளியமரம். கிரிகள்—மலைகள். மந்தரப் பொருப்பால்—மந்தர மலையினால்.]

அரக்கன் சூழ்ச்சி

'சபை சிரிக்க வைப்பேன் ராவணனை: நான் சிரித்தால் போதாது' என்ற நிலையில் அங்கதன் சொன்ன வார்த்தை இது. 'சபை சிரிக்கட்டும்; ராவணன் சீறட்டும்' என்பது அங்கதன் மனநிலை. ஆனால் இந்த இரண்டு நோக்கங்களும் நிறைவேறவில்லை.

ராவணன் மீதுள்ள பயபக்தியால் அரக்கர்களால் சிரிக்க முடியவில்லை, வாலி பெயரைக் கேட்டதும், அந்த வாலில் அப்படித் தொங்கியதை அங்கதன் சொல்லோவியமாக்கிக் காட்டியதும் ராவணனுக்குச் சீற்றம் விளைக்கவில்லை.

சீற்றத்திற்கோ, சிரிப்பிற்கோ இது வாய்ப்பு இல்லையென்றே எண்ணி விடுகிறான். ராவணனுடைய ஆற்றலில் வஞ்சிக்கும் திறனும் ஒரு பகுதி யல்லவா?

'வாலி மகன் இப்படி வந்ததையே ஒரு நல்ல வாய்ப்பாக்கிக் கொள்ளலாமே!' என்று பத்து மூளைகளும் சுறுசுறுப்பாகப் பரபரப்பாக வேலை செய்யத் தொடங்குகின்றன.

பிரதாப லங்கேச்வரனைத் தான்கொலுவீற்றிருந்தும், விபீஷணனுக்கு லங்கா ராஜ்யத்தை வழங்கத் துணிந்த ராமனது அந்தச் செயல், ராவணனுடைய மானத்தை ரம்பம் போட்டு அறுப்பது போல் அறுத்துக் கொண்டிருக்கிறது. 'அதற்கு ஓர் எதிர்ச் செயலைப் பிரமாதமாகச் செய்து விடலாமே!' என்று துடிக்கிறது ராவணனுள்ளம்.

வாலி இவனுக்கு விரோதி தான்; எப்படி அவமானப் படுத்தி விட்டான்! போகட்டும். அவனோ இறந்து போய்விட்டான். ராமன் தானே இப்போது ஒரே விரோதி. 'இந்த விரோதியின் விரோதியான வாலி நண்பன் தானே!' என்று கருதுகிறது ராவணனுள்ளம்.

ராவணன் அங்கதனை நோக்கி,

உந்தைஎன் துணைவ
னன்றே? ஓங்குநற்
சான்றும் உண்டால்

[உந்தை—உன் தந்தை. துணைவன்—நண்பன்.]

என்றான்.

'நட்பு முறையில் அவன் ஏதோ செய்திருப்பான்; நானும் விளையாட்டாக உட்பட்டிருப்பேன்' என்ற குறிப்புடன் இப்படிச் சொல்லுகிறான்.

அந்த அவமானத்தை மறைத்துக் கொண்டு, அந்த வாலி மகனுக்கே வானர மகாராஜ்ய பட்டாபிஷேகம் செய்து விடுவதாகச் சொல்லி விடுவோம் என்பது இப்போது ராவணன் கனவு. அப்படியானால் விபீஷண பட்டாபிஷேகத்திற்கு இது ஒரு சரியான போட்டிச் செயலாகுமல்லவா!

எனவே, ராவணன் வாலி மகனை நோக்கி,

நிந்தனை இதன்மேல்
உண்டோ, நீஅவன்
தூதன் ஆதல்?

என்று கேட்கிறான்.



இப்படி இந்த ராமதூதன் உள்ளத்திலே ராமனுக்கு விரோதமான உணர்ச்சியைத் தூண்டி விடுகிறான். சற்றுத் தூண்டியதும் பனிச்சென்று,

தந்தனன் நினக்கு
யானே வானரத்
தலைமை!

என்று ஆசை காட்டுகிறான்.

விபீஷண பட்டாபிஷேகத்தை மனக் கண்ணால் வயிறெரியப் பார்த்துக் கொண்டவன் ராவணன். அதை நேரில் பார்த்துக் கொண்டவனல்லவா அங்கதன்?

உளவாளிகள் மூலமாக ராவணன் அந்த விவரங்களை யெல்லாம் அறிந்து கொண்டிருக்கிறான் என்று கருதுவது கூட பிழையாகாது.

தாழ்கடல் இலங்கைச்
செல்வம் நின்னதே
தந்தேன்!

என்பது ராமன் விபீஷணனை நோக்கிச் சொன்ன வார்த்தை, ராவணனோ,

தந்தனன் நினக்கு,
யானே வானரத்
தலைமை, தாழா
வந்தனை; நன்று
செய்தாய், என்னுடை
மைந்த!

[தாழா வந்தனை—தாமதம் செய்யாமல் வந்தாய்.]

என்று சொல்லுகிறான்.

'உன் அப்பனும் நானும் நட்பு முறையில் ஏதோ குஸ்தி போட்டதை நீ போராட்டம் என்று மயங்கிக் கூறி விட்டாய். அதனால் எனக்கொன்றும் அவமானம் விளைந்து விடவில்லை. வாலி மகன் ராமதூதன் என்பதுதான் பேரவமானம்' என்று சொல்லிவிட்டு, மேலும் 'குழந்தாய்!' என்று கொஞ்சிப் பேசுகிறான்.

விரைவில் கொஞ்சம் குரலை விட்டு, 'அட குழந்தாய்! என்ன மடத்தனமான காரியம் செய்து விட்டாய்' என்று தந்தைக்குரிய கண்டிப்புக் குரலிலும் பேசுகிறான். இந்தப் பேச்சிலேதான் என்ன என்ன உணர்ச்சிகளை வெளியிடுகின்றன சொல்லும் குரலும்!

இந்த அதிசயக் கவிச் சித்திரத்தை அப்படியே பார்த்துக் கொள்ள வேண்டியது தான்:

'தாதையைக் கொன்றான்
பின்னே தலைசுமந்(து)
இருகை நாற்றிப்
பேதையன் என்ன
வாழ்ந்தாய் என்பதோர்
பிழையும் தீர்ந்தாய்;
சீதையைப் பெற்றேன்,
உன்னைச் சிறுவனு
மாகப் பெற்றேன்!
ஏதெனக்(கு) அரிய(து)?'
என்றான், இறுதியின்
எல்லை கண்டான்.

[தாதை—தந்தை. தலை சுமந்து—கழுத்திலே தலையைச் சுமந்து கொண்டும். நாற்றி—தொங்கப் போட்டுக் கொண்டும். பேதையன் என்ன—சுத்த முட்டாள் என்று பிறர் சொல்லும்படி. இறுதியின் எல்லை—மரண காலத்தின் எல்லையைக் கண்டவனாகிய ராவணன்.]

'நன்று செய்தாய், என்னுடை மைந்த!' என்று ராவணன் சொல்லிச் சற்று நிறுத்தினான். அதற்குப் போட்டியாக உடனே அங்கதன் ஒன்றும் சொல்லிவிடவில்லை. 'இன்னும் என்ன சொல்லப் போகிறானோ, பார்க்கலாம்!' என்று கொஞ்சம் பொறுத்துப் பார்த்தான்.

'தந்தையைக் கொன்றவனுக்குப் பின்னே சென்றாயே!' என்றான். 'உன் கழுத்திற்குச் சுமையாகத் தலையை வைத்துக் கொண்டு போனாயே!' என்றான். 'இரு கைகளையும் விழுது போலத் தொங்க விட்டுக் கொண்டு தானே சென்றாய்!' என்றான்.

ஒன்றின்னொன்று உச்சமாகப் பேசி வந்தவன்,

பேதையன் என்ன
வாழ்ந்தாய்!

என்றும் சொல்லி விட்டான். சொந்தம் பாராட்டித்தான் இப்படி யெல்லாம் பேசி விட்டான்.

'ஒருவேளை அதிகப் பிரசங்கம் ஆகி விட்டதோ!' என்ற நினைப்புடன்,

பேதையன் என்ன
வாழ்ந்தாய் என்பதோர்
பிழையும் தீர்ந்தாய்!

என்கிறான் ராவணன்.

'சீதையைப் பெற்றேன்' என்று குறிப்பாகச் சொல்லிவிட்டு, 'உன்னைச் சிறுவனுமாகப் பெற்றேன்' என்று மறுபடியும் கொஞ்சுகிறான்.

எனினும், பேச்சுப் போட்டியில் வெற்றி ராவணனுக்கு இல்லை யென்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.



84. எரிமலை சிரிக்கிறது

பேச்சுப் போட்டியில் தான் வெற்றி பெறுவதாகவே எண்ணம் ராவணனுக்கு. ஆனால் நடப்பதென்ன!

வாலிமகன் தன்னைப் பரிகசித்துப் பேசியும், அவனையே சபை சிரிக்கும்படி வைத்து விட்டதாக நம்புகிறான். ஏன், அவனை வசப்படுத்திக் கொண்டு மேலே மேலே பெரிய பெரிய காரியங்கள் செய்யப் போவதாகவும் கனாக் காண்கிறான்.

வலை வீசுகிறான்
(அரசும் ஆசியும்)

ராவணன் மூளை தனக்கே 'சபாஷ்' போடுகிறது. 'சூடு போட்டு வசப்படுத்திக் கொண்டோம். யாரை?— வாலி பிள்ளையை. நமது திறமையே திறமை; அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!' என்ற எக்களிப்புடன் தான்,

பேதையன் என்ன
வாழ்ந்தாய்!

என்றே துணிந்து பேசிவிட்டான்.

நெருக்கடியான சந்தர்ப்பங்களில் இவ்வளவு நெஞ்சுத் துணிவும் துடுக்கும் விசேஷ வெற்றியடையக் கூடுமென்பதை ராவணன் அநுபவத்தால் அறிந்து கொண்டிருக்கிறான். எனினும், வாலி பிள்ளையை நோக்கி அப்படிச் சொல்லி விட்டோமே என்று கொஞ்சம் சங்கோசத்துடன், தான் சொல்ல வந்ததை வேறு விதமாக முடித்துக் காட்டுகிறான்.

அங்கதன் முகத்தைப் பார்த்துத் தான் பேசிக் கொண்டிருக்கிறான் ராவணன். 'என்னுடை மைந்த!' என்று கொஞ்சிப் பேசும் போதும், 'பேதையன் என்ன வாழ்ந்தாய்' என்று இடித்துரைத்த போதும், வெறுப்பாவது கோபமாவது அங்கதன் முகத்தில் காணப்படவில்லை.

இதனால் ராவணனுக்கு நெஞ்சுத் துணிவு அதிகரிக்கிறது. துடுக்கும் மிடுக்கும் ராவணாகாரமாகி விட,

சீதையைப் பெற்றேன்;
உன்னைச் சிறுவனு
மாகப் பெற்றேன்!

என்று கூடச் சொல்லித் தீர்த்து விடுகிறான்.

இந்த ஆணவத் துடுக்கையும் பொறுத்துக் கொண்டு தானிருக்கிறான் அங்கதன்.

ஏதெனக்(கு) அரியது?

என்று பேச்சை முடித்துக் கொண்டது போல் சற்றுச் சும்மா இருக்கிறான் ராவணன்.

'உன்னையும் முடித்துக் கொள்ளப் போகிறாய்!' என்கிறது அங்கதனுள்ளம். ஆனால் இக்கருத்தை வெளியிடாமலே, ராவணன் மேலும் பேசுவதைக் கேட்டுக் கொண்டுதா னிருக்கிறான்.

அங்கதனுடைய அகக் கருத்தே கவிக் கூற்றாக வெளியிடப் படுகிறது,

இறுதியின் எல்லை
கண்டான்

என்பதாக.

ராவணனே அங்கதனை வசீகரிக்கும் அந்த முயற்சியில் இறுதி வெற்றியைக் காண விழைந்தவனாய், விரைந்தவனாய்,

அந்நரர் இன்று
நாளை அழிவதற்(கு)
ஐயம் இல்லை;

உன் அர(சு) உனக்குத்
தந்தேன்; ஆளுதி
ஊழிக் காலம்!

என்று உறுதி கூறி அரசும் தந்து ஆசியும் தருகிறான்.

'என் அரசை ராமன் வேறொருவனுக்குக் கொடுத்தானே; நானோ உன் அரசை உரிமை பிசகாமல் உனக்கே தருகிறேன்' என்பது ராவணன் குறிப்பு.

மேலும், தந்திரமாய்ப் பேசி அங்கதனை வலைப்படுத்தும் முயற்சியில் முழு வெற்றியும் அடையப் பார்க்கிறான். அங்கதனைச் சுற்றி வலை இறுகிக்கொண்டிருப்பதாகவே எண்ணம்.

ராமன் தன் தம்பியை நோக்கி, 'நீ விபீஷணனுக்கு மகுடம் சூட்டுவாய்' என்று கட்டளையிட்டான். ராவணனோ தானே அங்கதனுக்கு முடிசூட்டப் போவதாய்ச் சொல்லுகிறான் :

'பொன்னரி சுமந்த
பீடத்(து) இமையவர்
போற்றி செய்ய,

மன்னவ னாக!
யானே சூட்டுவன்
மகுடம்' என்றான்.

[பொன் அரி சுமந்த – சிங்கம் தாங்குவதாகப் பொன்னால் செய்யப்பட்டிருக்கும். பீடத்து – ஆசனத்திலே. இமையவர் – தேவர்கள். மன்னவன் ஆக – மன்னவனாக ஆட்சி செய்க.]

தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு அங்கதன் ராவணன் வாயைத் தூண்டிய வண்ணமாயிருந்தான்.

சுந்தரத் தோள்க
ளோடும் வாலிடைத்
தூங்கச் சுற்றி

என்று இவன் காட்டிய சொல்லோவியத்திற்குப் பதில் அவனும் ஒரு சொல்லோவியம் தீட்டி விட்டான்,

பொன்னரி சுமந்த
பீடத்(து) ...


என்றெல்லாம்.

சுந்தரத் தோள்களோடும் ராவணனை வாலில் தொங்க விட்டு ராவணன் முகத்திற்கெதிரே காட்டினான் அங்கதன். அந்த ராவணனோ, தங்கச் சிங்கம் சுமக்கும் உயர்ந்த ஆசனத்திலே அங்கதனைத் தூக்கி வைத்து விடுகிறான்!

அங்கதன் சிரிப்பு

மௌனமாய்ச் சாதுவாய்த் தோன்றிய எரிமலை படீரென்று வெடிக்கிறது. கிடு கிடென்று ஆடத் தொடங்குகிறது நிலப் பகுதி.

மலை நெருப்பைக் கக்குகிறது! கங்குகளைக் கனற் பொறிகளைக் கற்களைப் பாறைகளை வீசுகிறது.



இந்த எரிமலையின் கோர தாண்டவம் தான் அங்கதன் சிரிப்பு :

அங்கதன் அதனைக்
கேளா, அங்கையோ(டு)
அங்கை தாக்கித்

துங்கவன் றோளும்
மார்பும் இலங்கையும்
துளங்க நக்கான் !

[கேளா – கேட்டு. அங்கை – அழகிய கை. துங்க வல் தோளும் – உயர்ந்துள்ள வலிய தோள்களும். துளங்க – அசையும் படி. நக்கான் – சிரித்தான்.]

சகல கலா வல்லபரான ஒரு பேராசிரியரின் பெருஞ் சிறப்பைப் பேரறிஞர் கார்லைல் வருணித்திருக்கிறார். ஒரு குதிரை லாயமே சேர்ந்து கனைத்தது போலிருந்ததாம் அந்தப் பேராசிரியச் சிரிப்பு. தோளும் மார்பும் குலுங்கச் சிரித்தது மட்டுமல்ல, உடம்பு முழுவதும் குலுங்கக் குலுங்கச் சிரித்ததாம்.

அங்கத எரிமலையோ, கைகளைச் சேர்த்துப் புடைத்துத் தோள் குலுங்க மார்பு குலுங்க. இலங்கையும் கிடுகிடுக்கச் சிரித்தது.

'இது என்ன பூகம்பமோ!' என்று திகைப்பவர் முன்னே தீயருவி கொட்டத் தொடங்குகிறது.

அங்கதன் அதிகமாப் பேசவில்லை. சீற்ற வெந்தீ தொடக்கத்திலே ஒரு சிற்றருவியாகத்தான் விழுகிறது :

'இங்குநின் றோர்கட்
கெல்லாம் இறுதியே
என்ப(து) உன்னி

உங்கள்பால் நின்றும்
எம்பால் போந்தனன்
உம்பி' என்றான்.

[உன்னி – முன் கூட்டியே எண்ணிப் பார்த்து விட்டு. உங்கள்பால் நின்றும் – உங்களிடத்தி னின்றும் எம்பால் – எம்மிடத்து. போந்தனன் – வந்துள்ளான். உம்பி – உன் தம்பி.]

முதல் முதல் கொஞ்சம் நெருப்பைச் சொரிந்துவிட்டு மௌனமாகியிருந்து மறுபடியும் திடீரென்று பொங்கி ஒரே தீ வெள்ளமாய் உருகிப் பெருகி ஓடச் செய்யும் எரிமலை போலாகி விடுகிறான் வாலி மகன்.

ஆசை காட்டி மோசஞ் செய்ய முயன்ற அரக்கனை நோக்கி,

வாய்தரத் தக்க
சொல்லி என்னைஉன்
வசம்செய் வாயேல்

[வாய்தரத் தக்க – வாய்க்கு வந்தவைகளை யெல்லாம்.]

என்று நிமிர்ந்து உரக்கச் சொல்லிவிட்டுச் சற்றுக் குரலைத் தாழ்த்திக் கொள்கிறான்.

இப்படித் தாழ்த்திக் கொண்ட குரலில்,

ஆய்தரத் தக்க
தன்றோ தூதுவந்(து)
அரசு ஆள்கை?

[ஆய்தரத் தக்கதன்றோ – ஆராய்ந்து ஆலோசிப்பதற்குரிய செயல் அல்லவோ? தூது வந்து அரசு அது ஆள்கை – தூதனாகப் பணி செய்ய வந்து அரசனாகச் சிங்காதனத்தில் கொலுவிருக்கும் காரியம்.]

என்று கம்பீரமாகக் கேட்கிறான்.

தன்னையும் கேட்டுக் கொள்ளும் தோரணையில் தான் ராவணனைப் பார்த்துக் கேட்கிறான்.

பரம ஏழை ஒருவனுக்கு அதிர்ஷ்டச் சீட்டு விழுந்து திடீரென்று முப்பது லட்சம் நாற்பது லட்சம் கிடைத்து விட்டால், அவனால் அதை உடனே நம்பி விடத் தான் முடியுமா? நிதானமாய்க் 'கனவா. நனவா!' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்க்க வேண்டாமா!

'தூதனாக, ஊழியனாக, அடிமையாக வந்து சேர்ந்தேன்; திடீரென்று சிங்காதனமே கிடைத்து விடுகிறது, ஜம்மென்று கொலு வீற்றிருக்க! இத்தகைய பேரதிர்ஷ்டத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா?' என்கிறான் அங்கதன்.

மேலும், உரக்கச் சிந்திக்கிறான்: 'இந்தச் சிங்காதனம் எப்படிக் கிடைத்தது! யார் கொடுப்பது! யார் வாங்குவது!'

நீதரக் கொள்வேன்
யானே!

என்று முழங்குகிறது இடிக் குரல்.

வாலி மகனுக்கு ராஜ்யம் வேண்டுமென்றால், ராவணனிடத்திலா வந்து யாசகம் பெற்றுக் கொள்வது! யார் யாருக்கு ராஜ்யம் தருவது! அட, கருமமே!

இதற்கு ஓர் உவமை தேடுகிறது அங்கத சிந்தனை. எல்லாம் உரக்கச் சிந்திப்பதுதானே :

'நீதரக் கொள்வேன்
யானே! இதற்(கு)இனி
நிகர்வே(று) என்னில்,

நாய்தரக் கொள்ளும்
சீயம் நல்லர(சு)!'
என்று நக்கான்.

[சீயம் – சிங்கம். நக்கான் – சிரித்தான்.]

ஒரே ஒரு காட்டில் ஒரு சிங்கம். மாட்சிமை தங்கிய மிருகேந்திர சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கவில்லையே என்ற கவலை — அந்த மிருகேந்திரனுக்கு இல்லை — வேறொரு பிராணிக்கு வந்து விட்டதாம்.

அந்தப் பிராணி உரக்கக் குரைத்ததாம், 'நான் தருகிறேன் உன் சிங்காதனத்தை; நீ கொள்வாய், சிங்கமே!' என்பதாக.

'அப்படிச் சிங்கம் அரசு கொண்டால், அது நல்லரசுதானே!' என்று சிரிக்கிறான் வாலி மகன்.

இந்தச் சிரிப்பை வார்த்தைக் கங்குகளுடன் எவ்வளவு தெளிவாகப் பார்க்கிறோம் இந்த முழுப் பாட்டிலே:

வாய்தரத் தக்க
சொல்லி என்னைஉன்
வசம்செய் வாயேல்,
ஆய்தரத் தக்க
தன்றோ தூதுவந்(து)
அரச தாள்கை?
நீதரக் கொள்வேன்.
யானே? இதற்(கு)இனி
நிகர்வே(று) எண்ணில்,
நாய்தரக் கொள்ளும்
சீயம் நல்லர(சு)!'
என்று நக்கான்.

'நாய் தரக் கொள்ளும் சீயம் நல்லரசு!' என்று சிரித்ததுதான் தாமதம், ராவணன் சிங்காதனத்திலிருந்து எழுந்து விட்டான், 'இந்தக் குரங்கை இனி வைத்துப் பார்ப்பதில்லை!' என்ற கூச்சலுடன்.

இந்தக் கடுங் கோபத்திலே 'ஒருவேளை சிவ பெருமான் தந்த வாளையே உபயோகப்படுத்தி விடுவானோ!' என்றெல்லாம் எண்ணக் கூடும். ஆனால் அந்தக் கலக்கத்திற்கு இடம் கொடுக்காமலே தூதுச் செய்தியையும் கேட்கப் போகிறான் ராவணன். கதை மேலே நடக்க வேண்டுமல்லவா?

கதை நடத்துவதில் இப்படி ஓர் இடர்ப்பாட்டை—முட்டுக்கட்டையை—க் குறுக்கிடச் செய்து, பிறகு இத்தடையிலிருந்து பளிச்சென்று விடுவித்துக் கொண்டு மேலே பாய்ந்து செல்வது ஒருவகைக் கம்ப சூத்திரமாகும்.

குரங்கை எப்படியாவது கொன்று தீர்த்துவிட வேண்டும் என்ற கோபத்திலே எழுந்து நிமிர்ந்தவன், 'ஐயோ குரங்கைத் தொடுவதா என் சுடர்ப் படை?' என்று நாணிக் குறுகி, மறுபடியும் சிங்காசனத்தில் உட்கார்ந்து விடுகிறானும்.

இப்படி உட்கார்ந்தவன் அங்கதனைப் பார்த்து, 'நீ வந்த காரியத்தையும் சொல்லித் தொலை!' என்று சீறுகிறான்.

'உன்னுடைய "நரமனுஷ்ய" தெய்வங்களான ராமலட்சுமணர் இறப்பது நிச்சயம்; அவர்களை நம்பி வந்திருக்கும் நீயும் இறந்தொழிவது நிச்சயம். வந்த காரியத்தைச் சொல்லித்தானே செத்துப் போ!' என்கிறான்.

இது கேட்டதும், எரிமலை மறுபடியும் பொங்குகிறது; தூது வந்த செய்தியைச் சுடச்சுடக் கொட்டுகிறது. அலையலையாகப் பொங்குகிறது வாக்குப் பிரவாகம்.

* * *

'தமிழ்' என்றால் 'இனிமை' யென்பது மட்டுமல்ல; 'தமிழ்' என்றால் கனலின் கடல் என்பதையும் தெரிந்து கொள்ளப் போகிறோம். 'தமிழின்' சக்தியைப் பரிபூர்ணமாக உணரப் போகிறோம் அங்கதனது வாக்கு வன்மையிலே.



85. அங்கதப் பேருரை

வேடன் வலை போடுவதைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது சிங்கம். 'சரி, சிக்கிக் கொண்டார் மிருக ராஜா!' என்ற எண்ணத்துடன் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறான் வேடன். ஆர்ப்பாட்டம் செய்கிறான்.

திடீரென்று வலை கிழிக்கப்படுகிறது. வீர கர்ஜனையுடன் வெளிப்படுகிறது சிங்கம். வேடன் ஆசையில் இடி விழுகிறது. வீரம், மானம், கோபம் எல்லாம் வெறியாட்டம் ஆடுகின்றன. வேடன் வேட்டையாடப் படுகிறான்! விரித்த வலை தன்னையே சுற்றிக்கொள்ள, ஓய்ந்து சாய்ந்து விடுகிறான்!

ராவணன் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த அங்கதன், அந்தச் சூழ்ச்சி வலையைக் கிழித்துக் கொண்டு வெளிப்படுகிறான்; கர்ஜிக்கிறான். அந்தக் கர்ஜனை, அந்தச் சிரிப்பு, நெருப்பாய் எரிக்கிறது லங்கேச்வரன் பிரதாபத்தையும், மானத்தையும்!

மானம், கொலைத் தூண்டுகிறது. மானமே குறுக்கிட்டு அந்தக் கொலை முயற்சியையும் தடுத்து விடுகிறது.

'அடுவனே' என்னப்
பொங்கி ஓங்கிய
அரக்கன், 'அந்தோ!
தொடுவனே குரங்கைச்
சீறிச் சுடர்ப்படை'
என்று,—

[அடுவனே — கொன்று தீர்த்து விடுவேன். தொடுவனே குரங்கைச் சீறிச் சுடர்ப் படை — சீறிக் குரங்கைத் தொடுவேனா இந்த ஒளியுள்ள ஆயுதத்தால். என்று — என்று சொல்லி.]

—அப்படியே சாய்ந்து விடுகிறான் சிங்காதனத்திலே.

பிறகு கொஞ்சம் முன்னோக்கி நிமிர்ந்து அங்கதனைப் பார்வையினாலேயே சுட்டு விடுவது போலப் பார்த்து,

'நடுவனே செய்யத்
தக்க நாள்உலந்
தாரை நம்பிப்
படுவதே துணிந்தா
யாகில் வந்தது
பகர்தி' என்றான்.

[நடுவன் — யமன். நாள் உலந்தாரை — நாள் முடியப் பெற்றவர்களான அந்த நர மனுஷ்யர்களை. படுவதே — அழிந்து போவதற்கே. பகர்தி — சொல்வாய்.]

'அந்த நர மனுஷ்யர்களை நம்பி நீயும் சாகத் துணிந்து விட்டாயானால், வந்த காரியத்தைச் சொல்லித் தானே தொலைந்து போ!' என்று ராவணன் கடுங்கோபத்துடன் கூச்சலிட்ட பின், அங்கதன், தூது வந்த செய்தியைத் தெரிவிக்கிறான்.

பேருரையின் அமைப்பு முறை

ஆறு கவிகளில் ஓர் அதிசயச் சொற்பொழிவு இது. இதில் முன்னுரை முடிவுரைகள் உண்டு. சங்கீதத்தில் பல்லவி போல் மீண்டும் மீண்டும் ஒலிக்கும் உயிர்நிலை வாக்கியம் உண்டு. எல்லாம் சேர்ந்து கொண்டு எட்டுக் கவிகளில் முற்றுப் பெறுகின்றன.



டைய தூதன் தனது தர்மாவேசம் என்ற கோப முரசாக விளங்க வேண்டும் என்பதை வற்புறுத்தினான் ராமன், இரண்டாவது கவியில். இதைப் பல பாடல்களில் பிரதி பலிக்கச் செய்கிறான் அங்கதன் ராவணசபையிலே, ராமனது ஆவேச பீடமாகத் தோன்றி.

அங்கதனும் அனுமனைப் போல் 'சொல்லின் செல்வன்' என்பதற்கு இந்த எட்டுக் கவிகளும் தக்க சான்று தருகின்றன. சொற்செட்டு, செறிவு, தெளிவு, சக்தி முதலான அம்சங்கள் எல்லாம் நிறைந்த முழுப் பேச்சு வன்மையையும் இங்கே காண்கிறோம்.

முதல் முதல், ராமபிரான் தன் மூலமாக அனுப்பியிருக்கும் செய்தி தான் இப்போது சொல்லப் போவது என்பதைத் தெளிவு படுத்துகிறான், இந்த முன்னுரைப் பகுதியில். தான் ராமனை நோக்கி, 'ராவணனுக்குச் சொல்ல வேண்டிய செய்தி என்ன!' என்று கேட்டதும் அவன் சுருக்கமாக விடை கூறியதை ராவணன் உள்ளத்தில் தைக்குமாறு — அந்த இதயத்தை வதைக்குமாறு — பதிய வைக்கிறான்.

அங்கதன் ராவணனிடம் சொல்லவேண்டியதைச் சுருங்கக் கூறிய பின்பு, தன்னு

அங்கதனது இந்தப் பேருரையை ஆராய்வதற்கு முன், ராமன் அங்கதனிடம் சொல்லி வைத்ததை அப்படியே இப்போது நினைவூட்டிக் கொள்வது நலமாகும்.

'என்ன அவனுக்கு உரைப்பது!' என்று அங்கதன் கேட்டதும் ராமன் சொன்ன சுருக்கமான பதில் இது என்று கவி ஏற்கெனவே கூறியிருப்பது :

'என் அவற்(கு) உரைப்ப(து)?'
　என்ன, 'ஏந்திழை
　யாளை விட்டுத்

தன் உயிர் பெறுகை
　நன்றே? அன்றெனில்
　தலைகள் பத்தும்

சின்னபின் னங்கள்
　செய்யச் செருக்களம்
　சேர்தல் நன்றே!

சொன்னவை இரண்டின்
ஒன்றே துணிகெனச்
சொல்லி(டு)' என்றான்.

ராவணனுக்குப் புரியும் பாஷையில் அங்கதன் பேச வேண்டுமென்பது ராம னுள்ளம். 'வலிமையே உரிமை' என்ற கொள்கையில் ஊன்றியிருக்கும் லங்கேச் வரனிடம், அந்த அசுர வலிமைக்கும் மேலான தர்மசக்தி, சத்திய வீரம் உண்டு என்பதை அங்கதன் முரசு கொட்டுவது போல்—ஏன், தேள் கொட்டுவது போல வும் தான்—கொட்டி வெளியிட வேண் டும் என்பது ராமன் கருத்து.

இந்தக் கருத்தைத் தான் அங்கதன் எவ்வளவு நன்றாக உணர்ந்து கொண் டான் என்பதற்கு அங்கதன் பேருரையின் இந்த முன்னுரையே சான்றாகின்றது:

கூவி இன்(று) என்னை
நீபோய்த் தன்குலம்
முழுதும் கொல்லும்
பாவியை, அமருக்(கு)
அஞ்சி அரண்புக்குப்
பதுங்கி னானைத்
தேவியை விடுக;
அன்றேல் செருக்களத்(து)
எதிர்ந்து தன் இன்
ஆவியை விடுக
என்றான், அருள் இனம்
விடுகி லாதான்.

[கூவி இன்று என்னை — இன்று என்னைக் கூப்பிட்டு. அமருக்கு — போருக்கு. அரண் புக்கு — அரணுக்குள் புகுந்து. செருக்களத்து — போர்க்களத்திலே. தன் இன் ஆவியை — தன் இனிய உயிரை. இனம் — இன்னம்; இன்னும். விடுகிலாதான் — விட்டு விடாத ராமன்.]



ராமன் சொன்னதை மட்டுமல்ல, கருத்தையும் ஊகித்து அந்தக் குறிப்பும் புலப்பட அங்கதன் பேசுகிறான். 'ஏந்திழையாளை விட்டுத் தன் உயிர் பெறுகை நன்றே!' என்று ராமன் முதல் முதல் கூறியதையும், அப்போது அந்த முகத்திலே ததும்பிய அகத்தின் அழகையும் நன்றாக அறிந்து கொண்டவனாதலின், 'அருள் இ(ன்)னம் விடுகிலாதான்' என்று தன் தலைவனைச் சுட்டிக் காட்டுகிறான்.

அங்கதன் சொல்ல வேண்டியதையெல்லாம் ராமன் சுருக்கமாக ஒரே கவியில் சொல்லிக் காட்டி விட்டான். எனினும், தான் சொன்னதற்கு அனுபந்தமாக, தர்ம வீரத்தில் நம்பிக்கை இல்லாதவனுக்கு 'வீர தர்மம் என்று ஒன்று இருக்கிறதே; அது அசுராவேசம் கொண்டவர்களையும் ஆட்கொள்வதன்றோ!' என்பதை வற்புறுத்தி நினைவூட்டச் சொல்லுகிறான்.

இந்த அனுபந்த உரைதான் அங்கதனுடைய பேருரையைப் பெரிதும் உருவாக்கி வளர விடுகிறது. இந்தப் பேருரைக்கு உயிர்ச்சக்தி ஊட்டுவதும் இது.

ராமனது இந்த அனுபந்த உரை:

'அறத்துறை அன்று,
வீரர்க்(கு) அழகும் அன்(று);
ஆண்மை அன்று,
மறத்துறை அன்று,
சேமம் மறைந்(து) உறைந்(து)
ஒதுங்கி வாழ்தல்;
நிறத்துற வாளி
கோத்து நேர்வந்து
நிற்கு மாகில்,
புறத்துற எதிரே
வந்து போர்தரப்
புகறி' என்றான்.

ராமன் இங்கே குறிப்பிடுகிற அறத்துறை வீர தர்மத்தின் துறைதான். கொள்ளைக்காரர்களுக்குள்ளும் ஒரு நியமம் இருக்க வேண்டுமல்லவா? அத்தகையதொரு நியமத்தின் கூறுகளே அறத்துறையென்றும் மறத்துறையென்றும் இங்கே குறிக்கப்படுகின்றன.

பழி பாவத்திற்கு அஞ்சாத அரக்க வீரர்களும் 'கோழை' என்ற குற்றச் சாட்டுக்கு அஞ்ச வேண்டியதுதானே என்பது குறிப்பு.

அதர்ம வீரம் முழுவதுமே ராமன் திருவுள்ளத்தில் பேடித்தனம்தான். 'பேடிப்

போர் வல் அரக்கர்' என்று அரக்கர்களை யெல்லாம் அரக்கர்கோனுடன் சேர்த்தே குறிப்பிட்டான் ராமன் சூர்ப்பணகை யிடம். எனினும், இப்போது 'அரக்க வீரத்திற்கும் அழகில்லையே அரண் புக்கு ஒதுங்கி யிருப்பது' என்றான்.

சரணாகதியிலே குற்றங்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் கிடைக்கும். அந்த வழியே நல்ல வழி, பெரு வழி; ஒரே வழி. ஆனால் அந்தத் துணிவு இந்த நிலையிலும் ராவண னுக்கு வரப்போவதில்லை யென்பது ராம னுக்குத்தான் நன்றாகத் தெரியுமே. எனவே, வீர மரணத்திலாவது விரைவில் பிராயச்சித்தம் தேடிக் கொள்ளுமாறு ராமன் சொல்லி அனுப்பினான்.

இதைத்தான், 'நேர் வந்து நிற்குமாகில் புறத்துற எதிரே வந்து போர்தரப் புகறி (புகல்வாய்)' என்று வற்புறுத்திச் சொன்னான். இந்த உரையின், இந்த மன நிலையின் விரிவுரையாகின்றது அங் கதப் பேருரை.

இரண்டு தூதர்

இந்தப் பேருரையை நன்றாகக் கேட் டுக் கவனித்துச் சிந்தித்துத் தெளிவதற்கு முன் அனுமன், தூதனாகப்போய் நிகழ்த் திய பேருரையை இப்போது நினைவூட் டிக் கொள்வதும் நலமாகும். அனுமனும் ராமனுள்ளத்தைத் தானே தன்னுடைய ஆவேச பீடமாக அமைத்து வெளியிடு கிறான்!

அனுமன் பேருரையில் ராமனது தெய் வத் தன்மை தெளிவாக வெளியிடப்படு கிறது. அதை அங்கதனும் 'பூத நாய கன்......' என்று தொடங்கும் பாட்டில் சுருங்கச் சொல்லி விடுகிறான்.

ராவணன் வாழ்க்கையை வீணாக்கி விட் டானென்றும், ராஜதர்மத்தைச் சிறிதும் நோக்கவில்லை யென்றும், தீமையிலேயே ஊறிக் கிடக்கிறானென்றும் அனுமன் கூறினான். ராவணனுடைய தீமைகளுக் கெல்லாம் சிகரமாக அமைந்தது சீதா தேவியைக் கவர்ந்து வந்தது என்பதை யும் தெளிவு படுத்தினான்.

சத்திய விரோதமாகவும் தரும விரோத மாகவும் நடப்போருக்கு அழிவு நிச்சயம் என்பதைக் குறிப்பிட்டு,

அறம் திறம்பினர்
ஆர்உள ராயினர்?

என்ற ஒரு பெரிய கேள்வியை ராவண னுக்கே போட்டு விடுகிறான்.

எத்தகைய அரக்க பலமும்—அது புய வலிமையானாலும் அறிவின் சக்தியேயானா லும் பயன்படாது என்பதை வற்புறுத் தினான். ராட்சஸர்களின் அதர்ம பலம் ராம பாணத்திற்குத் தப்பாது என்றான்.

சீதையை விட்டு விடுவதே பிழைக்கும் வழி என்பதை முடிவாக வற்புறுத்தி னான். அந்த ஒரு பெருஞ் செயலிலிருந்து ராவணன் அறநோக்கு உடையவனாகக் கூடும் என்பது குறிப்பு.

தான் சொன்னதெல்லாம் சுக்கிரீவன் சொல்லி யனுப்பிய செய்தி என்றான் அனு மன். ஆனால் அங்கதப் பேருரை ஸாராம் சத்தில் ராமன் வார்த்தையேதான்.

'நீ சீதா தேவியையும் அனுப்பி விட மாட்டேன் என்கிறாய்: போர்க்களத்திலே தான் ஆண்மை காட்டப் போகிறாயா?' என்று பேசும் அங்கதன், 'பாட்டி யும் மாமனுமாகிய சுபாகுவும் கொல்லப் பட்ட காலத்திலே அவருக்குத் துணையாக வந்து சேராதவன், இனி வந்து ஆண்மை காட்டப் போகிறானா?' என்கிறான்.

சூர்ப்பணகையின் அங்க பங்கத்தைக் குறிப்பிடுகிறான்; கரன் முதலிய தம்பி மாரின் வதத்தைச் சுட்டிக் காட்டுகிறான். 'அப்போது வராதவன் இனி எதிர் வருவ துண்டோ?' என்கிறான்.

சீதையை வஞ்சித்துக் கவர்ந்த செயலை யும் ராவணனுடைய ஆண்மைக்கு இழுக் காகச் சுட்டிக் காட்டுகிறான். அனுமன் இலங்கையில் விளைத்த வீர தீரச் செயல் களையும் நினைவூட்டுகிறான்.

ராவணனுடைய ஒற்றர்களுக்கு ராமன் கருணை காட்டியதையும் குறிப்பிடுகிறான். சேது பந்தனம், விபீஷண பட்டாபிஷே கம் ஆகிய செயல்களையும் நினைவூட்டி, 'இனி உனக்கு என்ன ஆண்மை இருக் கிறது?' என்று கேட்கிறான்.

அண்மையில் சுக்கிரீவன் மகுடமணி பறித்ததையும் குறிப்பிட்டுத் தன் அபிப் பிராயத்தையும் சுடச் சுட வெளியிடப் போகிறான் அங்கதன். இந்தப் பேரு ரையை இனிக் கூர்ந்து கவனிப்போம்.

* *

அங்கதப் பேருரை, உலகப் பேரிலக் கியங்களில் கவித்திறனும் வாக்குவன்மை யும் ஒருங்கே தோன்ற இயற்றிச் சேர்த்திருக்கும் 'அந்தோணி பேச்சு' முதலான பகுதிகளை நினைவூட்டுகிறது.

படித்து இன்புறும் போதே, இச் 'சொல்லின் செல்வ'னுடைய குரலையும் கேட்கச் செய்கிறது.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

86. அலைகளின் இடி முழக்கம்

பாலகாண்டத்திலே ராமன் நடத்திய கன்னிப் போர் சீதா கல்யாணத்திற்கும் முன்பே நடைபெற்றதல்லவா? அந்தப் போரில் தாடகை கொல்லப்பட்டாள். அவள் ராவணன் பாட்டி; சுபாகு மாமாவுக்கும் மாரீச மாமாவுக்கும் தாய். தாடகைப் பாட்டி, சுபாகு மாமா ஆகியவர்களின் மரணம் குறித்து ஏதோ துக்கம் விசாரிப்பது போல் ராவணனுடைய மனப் புண்ணைத் தன் சொல்லம்பால் கிளறி விடுகிறான் அங்கதன்.

காண்டங்களைத் தாவிப் பாய்கிறான்

இதற்கும் மேலாகத் தங்கை மூக்கையும் ஞாபகப்படுத்துகிறான். இப்படியெல்லாம் அந்தப் பரிதாப நினைவுகளைக் கிளறிவிட்டு, 'அப்போது அங்கே வந்து சேராத ஆண் பிள்ளையே! இனி நீ செய்யும் ஆண்மையும் உண்டோ!' என்று கேட்கிறான்.

ராமன் கூறியதை முதலாவது கவியில் சுருக்கமாகச் சொன்னவன், 'தேவியை விடு, அல்லது ஆவியை விடு' என்பதைத் தெளிவுபடுத்தினான். பிறகு பாட்டி வந்ததிலிருந்து தொடங்கி, மேலே சுருங்கச் சொன்னதற்கு விரிவுரையும் குறிப்புரையும் தருகிறான்.

'பாட்டி, மாமா வதம் கேட்டும், தங்கையின் அங்கபங்கம் கண்டும் சண்டைக்குக் கிளம்பாதவன், தல விசாரணைக்குக்கூட வராத ஆண்மை என்ன ஆண்மையோ!' என்கிறான்:

பருந்துணப் பாட்டி
யாக்கை படுத்தநாள்,
படைஞ ரோடும்
மருந்தினும் இனிய
மாமன் மடிந்தநாள்,
வனத்துள் வைகி
இருந்துழி வந்த
தங்கை மூக்கும்வெம்
முலையும் எம்பி
அரிந்தநாள், வந்தி
லாதான் இனிச்செய்யும்
ஆண்மை உண்டோ?

[பருந்து உண — பருந்து உண்ணும்படி. யாக்கை — உடல். படுத்த — கொன்று வீழ்த்திய. மருந்தினும் — அமிர்தத்தைக் காட்டிலும். மாமன் — மாமனாகிய சுபாகு. வனத்துள் வைகி இருந்துழி — காட்டிலே தங்கியிருந்த போது. எம்பி — என் தம்பியான லட்சுமணன். வந்திலாதான் — வந்திராதவன்.]

அலையலையாகப் பொங்குகிறது இந்த வார்த்தைப் பிரவாகம். அடுத்த அலை இது:

கிளையொடும் படைஞ
ரோடும், கேடிலா
உயிர்கட் கெல்லாம்
களையெனத் தம்பி
மாரை வேரொடும்
களையக் கண்டும்,
இளையவன் பிரிய
மாயம் இயற்றி, ஆ
யிழையை வெளவும்
வளையெயிற் றரக்கன்
வெம்போர்க்(கு) இனிஎதிர்
வருவ துண்டோ?

[கிளையொடும் — சுற்றத்தாருடனும். கேடிலா உயிர்கட்கு எல்லாம் — உலகத்

நிலே அழிவில்லாத உயிர்களுக்கெல்லாம். களை என — இவர்கள் களையாக இருந்து உயிர்களாகிய பயிரைக் கெடுக்கிறார்களே என்று கருதி. தம்பிமாரை — கரன் முதலிய தம்பிகளை. இளையவன் — எனக்கு இளையவனாகிய லட்சுமணன். ஆயிழை — ஆராய்ந்தெடுத்த அணிகளைப் பூண்டவள்; (இங்கே) சீதை. வௌவும் — அபகரித்த; களவு செய்த. வளை — வளைந்த. எயிற்றரக்கன் — எயிறு + அரக்கன்: கோரப் பற்களையுடைய ராவணன். வெம்போர்க்கு — கொடிய போருக்கு.]

தாடகை, சுபாகு முதலானவர்கள் வதமானபோது வராமலிருந்தது போகட்டும்; தன் சொந்தத் தங்கை பரிபவம் அடைந்த அந்தப் பரிதாப நிலையிலாவது வந்திருக்க வேண்டாமா? அப்படிக் கேட்ட பின், கரன் முதலிய தம்பிமாரின் வதத்தை நினைப்பூட்டுகிறான்.

சூர்ப்பணகைக்கும், ராவணனது ஆதிக்கத்திற்கும் ஒருங்கே அரணாக நின்றவர்கள் கரன் முதலிய தம்பிமார். இப்போது அவர்கள் எங்கே! அவர்களுடைய சுற்றத்தார் எங்கே! படை வீரர்கள் எங்கே!

உலகத்திலே அவர்களை வைத்துப் பார்க்க விரும்பாமல் பயிருக்குக் களையெடுப்பதுபோல் அவர்களை யெல்லாம் களைந்து விட்டானும் ராமன். 'அப்போதாவது நீ வந்திருக்க வேண்டாமா. அட ராவணா!' என்று மேலும் மேலும் சொல்லம்பைக்கொண்டு மனப் புண்ணைக் குத்திக் கிளறுகிறான் அங்கதன்.

அதுவும் போகட்டும்; 'ராம லட்சுமணர்களுக்கு அஞ்சித்தானே மாயஞ் செய்து சீதையைக் களவாடிக்கொண்டு போனாய்! இதுவோ ஆண்மை, பேராண்மை போராண்மை?' என்கிறான் அங்கதன்.

ராமன் அப்படிச் சொல்லி யனுப்பியதாகச் சொல்லுகிறான். ராமனது சுருக்கமான வார்த்தைக்கும் உள்ளத்திற்கும் விரிவுரையாக, அவற்றின் ஆவேச பீடமாக, இப்படி யெல்லாம் பேசுகிறான் அங்கதன். இதற்கு முந்திய அலையின் வேகம்,

அரிந்தநாள் வந்தி
லாதான் இனிச் செய்யும்
ஆண்மை உண்டோ?


என்று முழக்கியதுபோல், இந்த இரண்டாவது அலை வேகம்,

வளைஎயிற் றரக்கன்
வெம்போர்க்(கு) இனிஎதிர்
வருவ துண்டோ?

என்று முழக்குகிறது.

சுந்தர காண்ட பாராயணம்

இனி அங்கதப் பேருரையின் மூன்றாவது அலையாக வருவது;



ஏந்திழை தன்னைக்
கண்ணுற்(று), எதிர்ந்தவர்
தம்மை எற்றிச்

சாந்தெனப் புதல்வன்
தன்னைத் தரையிடைத்
தேய்த்துத், தன்னூர்

காந்நெரி மடுத்துத்
தானும் கானவே
கடலைத் தாவிப்
போந்தபின், வந்தி

லாதான் இனிப்பொரும்
போரும் உண்டோ?

[ஏந்திழை—(இங்கே) சீதை. எதிர்ந்தவர்—எதிர்த்து வந்தவர்கள். எற்றி—தாக்கியழித்து. சாந்தென—சாந்து என; சந்தனம் போல. புதல்வன்—(இங்கே) அட்ச குமாரன். காந்து எரி மடுத்து—எரிகிற நெருப்பையிட்டுக் கொளுத்தி. போந்த பின்—அனுமன் போன பின்பும்.]

தாடகை வதமும் சுபாகு மரணமும் தங்கையின் பரிபவமும் கரதூஷணாதியர் வதமும் ராவணன் கண்ணால் காணாத செய்திகள். ஆனால் அனுமன் இலங்கையில் விளைத்த பராக்கிரமச் செயல்கள் ராவணன் காணவே நடந்தவையல்லவா?

'இந்த நிலையில் இந்த அனுமனைத் தொடர்ந்தாவது வந்திருக்கவேண்டாமா? ஆண் பிள்ளாய்!' என்பது அங்கதன் கேள்வி. ராமன் கேட்ட கேள்வியாகவே தான் சொல்லுகிறான். அந்த ஆவேசந் தானே இப்படி யெல்லாம் அங்கதனை ஆட்டி வைப்பது?



இந்தப் பாட்டிலே 'சுந்தர காண்டச் சுருக்க'த்தைக் காண்கிறோம். சீதையைக் கண்ணுற்றது, எதிர்த்தவர்களை வதைத்தது, அட்சகுமாரனை அழித்தது, அரக்கர் பேரூரில் தீயிட்டது, கடல் தாவிமீண்டது என்ற ஐந்து முக்கியமான செய்திகளில், சுந்தர காண்டத்தின் காவிய நாயகனாகி அனுமன் விளைத்த பேராண்மைச் செயல் களை ராவணனுக்கு நினைப்பூட்டுகிறான் அங்கதன்.

அனுமன் இட்ட தீ அரக்கனூரை எரித்தது; இப்போது அங்கதனது வார்த்தைப் பிரவாகம் காட்டுத் தீயைப் போல் ராவணனைச் சூழ்ந்து கொள்கிறது.

'என் தூதன் கடல் தாவிப் போய்க் கடுஞ் செயல்கள் செய்து மீண்டானே, ராவணன் கண்ணெதிரே, அப்போது கூட வந்து சேராதவன் இனி நேரே வந்து என்ன போர் செய்யப்போகிறான்?' என்று ராமன் சொன்னதாக அங்கதன் சொல்லுகிறான்.

தீயலை போல் வந்து மோதும் இந்த அலையின் வேகம்,

போந்தபின் வந்தி
லாதான் இனிப்பொரும்
போரும் உண்டோ?

என்று செவி சுடத் தாக்குகிறது ராவணனை.

ராவணன் ஏங்கும்படி அங்கதன் சுந்தரகாண்ட பாராயணம் செய்துவிட்டு, யுத்த காண்டத்திற்கும் வந்து விடுகிறான். அதி சமீபத்தில் நடந்த சில காரியங் களையும் நினைப்பூட்டி வயிற்றெரிச்சலைக் கிளப்பி விடுகிறான்.

'பார், பார் விபீஷண
பட்டாபிஷேகத்தை!'

அங்கதனுக்குப் பட்டாபிஷேகம் தானே செய்து வைப்பதாகச் சொன்ன அரக்கனுக்கு இவன், விபீஷண பட்டாபிஷேகம் முதலான நிகழ்ச்சிகளை நினைப்பூட்டும் வாக்குக் கடுமையைப் பாருங்கள்:

உடைக்குலத்(து) ஒற்றர்
தம்பால் உயிர்கொடுத்(து)
உள்ளக் கள்ளம்

துடைத்துழி, வருணன்
வந்து தொழுதுழி,
தொழாத கொற்றக்

குடைத்தொழில் உம்பி
கொள்ளக் கொடுத்துழி,
வேலே கோலி

அடைத்துழி, வந்தி
லாதான் இனிவர
ஐயம் உண்டோ?

[உடைக்குலத்து — ராவணனுடைய குலத்தைச் சேர்ந்த. ஒற்றர் தம்பால் — ஒற்றர்களிடத்திலே. துடைத்துழி — துடைத்த போதும். தொழாத கொற்றக் குடைத்தொழில் — வணங்கா முடித் தனியரசுக்கு அறிகுறியான கொற்ற வெண்குடையை. உம்பி — உன் தம்பியான விபீஷணன். வேலை — சமுத்திரம். கோலி அடைத்துழி — முயன்று சேது கட்டிய போதும்.]

யுத்த காண்ட நிகழ்ச்சிகளை அங்கதன் முறையாகக் குறிப்பிட வில்லை. 'ராமனுடைய வலிமைக்கு மட்டுமா நீ அஞ்ச வேண்டும்? அவனுடைய கருணையே உன்னை நடுங்கச் செய்திருக்க வேண்டும்' என்ற குறிப்புடன்தான் 'உன் குலத்தினரான ஒற்றர்களைக் கொல்லாமல் மன்னித்தருளினன் ராமன்' என்று அந்த அருள்—வலிமையை முதல் முதல் நினைவூட்டுகிறான்.

பிறகு சமுத்திர ராஜா வந்து தொழுததை நினைவூட்டுகிறான். அந்தத் தொழுகைக்கும் சேதுபந்தனத்திற்கும் இடையே விபீஷண பட்டாபிஷேகம் விமரிசையாக ராவண சிங்காதனத்திற்கு எதிரேயே நடைபெறுகின்றது! இவன் கொற்றவெண்குடை இவனைக் குப்புறத் தள்ளிவிட்டு விபீஷணனுக்கே நிழல் தருகிறது!

சடசட வென்று தொடங்கும் இடி சட்டென்று விழுவதுபோல வந்து செவியில் விழுகிறது, 'உன்னுடைய வணங்கா முடித் தனி வாழ்வையெல்லாம் உன் தம்பிக்கே கொடுத்துவிட்டான் ராமன்' என்ற செய்தி. ராமன் சொல்வதாகவே தான் இந்த நிகழ்ச்சியையும் ஞாபகப் படுத்துகிறான்.

இலங்கைப் பேரரசைத் தம்பி விபீஷணனுக்கு வழங்கிய இந்தச் செயலை ராமன், தான் மன்னித்த ஒற்றர்கள் வாயிலாக ராவணனுக்கு நினைவூட்ட விரும்பினன் என்பதை ஒற்றுக் கேள்விப்படலத்தில் தெரிந்து கொண்டிருக்கிறோம். இந்த நிகழ்ச்சி அங்கே வற்புறுத்தப்படுகிறது. இது சேதுபந்தனத்துடன் சேர்த்துச் சொல்லப்படுவதையும் அங்கே பார்க்கிறோம்.

அப்போது அங்கதன், 'ராவணனிடம் சொல்லுங்கள்' என்று ராமன் அந்த ஒற்றர்களிடம் கூறியவற்றைக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தான் எனக் கருதலாம்.

எல்லையில் இலங்கைச்
செல்வம் இளையவற்(கு)

ஈந்த தன்மை
சொல்லுதிர்!

என்று ராமன் அப்போது பேசத் தொடங்கியதை நினைவில் வைத்துக் கொண்டே அங்கதன் இப்போது அதைப் பயன்படுத்திக் கொள்கிறன் எனக் கருதலாம்.

அந்தச் செய்தியின் இறுதியில், அந்த ஒற்றர்களிடம் ராமன் ஸாக்ஷாத் பரமபத நாதனின் பயங்கரமான அதிகார முத்திரையைக் காட்டிப் பேசுவது போல்,

வாழ்வெலாம் தம்பி
கொள்ள, வயங்கெரி
நரகம் என்னும்

மீள்விலாச் சிறையின்
வைப்பேன் என்பதும்
விளம்பு வீரால்

என்று கூறி முடித்தானல்லவா? இம்முடிவுரை அங்கதன் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்திருக்க வேண்டும்.

'வாழ்வெலாம் தம்பி கொள்ள' என்று ராமன் சொன்னதைத் தான் அங்கதன் இப்போது,

குடைத்தொழில் உம்பி
கொள்ள

என்று ராவணனிடம் இடித்துக்காட்டுகிறன். ராமனுள்ளம் தெரிந்தே இது ராமன் சொல்லியனுப்பிய செய்தி என்கிறன்.

'அட, பைத்தியமே! உன்னுடைய ஒற்றர்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து, களிம்பு படிந்த பாத்திரத்தைத் துடைத்துக் கழுவுவது போல் அந்தக் கள்ள உள்ளத்தைத் துடைத்துப் பார்த்தானே ராமன், அப்பொழுது கள்வனே! நீ அங்கு வந்து குதித்திருக்க வேண்டாமா?' என்கிறன்.

இன்னும், ஒரே அலையுடன் இந்தப் பேருரை முடிவுரையை நோக்கப் போகிறது.



87. இடிக் கச்சேரி

வானம் இருண்டு மழை சோவென்று சொட்டுகிறது. சொட்டுவது போலத் தொடங்கி அதி வேகமாய்க் கொட்டத் தொடங்கி விட்டது.

'ஹோ ஹோ' என்று பேய்க் காற்று இசைபாட, இடையிடையே மின்னல் 'இடி இடி' யென்று பேய்ச் சிரிப்புச் சிரித்துச் சட சடவென்று தாளம் போடுகிறது.

பலவிதமாக அலறும் பல்லவி

ஓர் இடி, தங்கை மூக்கை நினைவூட்டி,

> அரிந்தநாள் வந்தி
> லாதான் இனிச்செய்யும்
> ஆண்மை உண்டோ?

என்று அலறுகிறது.

சீதையைக் கவர்ந்த வஞ்சனைச் செயலை நினைவூட்டி,

> வளையிற் றரக்கன்
> வெம்போர்க்(கு) இனிஎதிர்
> வருவ துண்டோ?

என்று கதறுகிறது ஓர் இடி.

அநுமன் அரக்கர் பேருரைப் பொசுக்கி மீண்டதை நினைவூட்டி,

> போந்தபின் வந்தி
> லாதான் இனிப்பொரும்
> போரும் உண்டோ?

என்று சிரிக்கிறது ஓர் இடி.

சேது பந்தனத்தை நினைவூட்டி,

> அடைத்துழி வந்தி
> லாதான் இனிவர
> ஐயம் உண்டோ?

என்று தாக்குகிறது ஓர் இடி.

கடைசியாக, சுக்கிரீவன் மகுடமணிகளைப் பறித்ததையும் நினைவூட்டி,

> பறிப்புண்டும் வந்தி
> லாதான் இனிப்பொரும்
> பான்மை உண்டோ ?

என்று அறைகிறது ஓர் இடி, கன்னத்திலும் தலையிலும் —ஆம், பத்துத் தலைகளிலும் இருபது செவிகளிலும்.


அதி சமீபத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியானதால் இந்த மனப் புண்ணையும் இப்படிக் குத்திக் கிளறிவிடுவதை ராவணனால் எப்படிப் பொறுக்க முடியும்? எனினும் திக்பிரமை கொண்டவன்போல், மானம் கொல்லச் செத்தே போய் விட்டது போல், சும்மா இருக்கிறான் அரக்கன் !

தர்பாரிலேயே ஒரு மூக்கறுப்பு

இவ்வளவு ஏச்சையும் பேச்சையும் கேட்டுக் கொண்டே தானிருக்கிறான், பெரு மூச்சுடன்.—'செத்த சவம் அல்ல, உயிருள்ள சவம் தான் !' என்றே சொல்லும்படி.

> மறிப்புண்ட தேவர்
> காண, மணிவரைத்
> தோளின் வைகும்
>
> நெறிப்புண்ட ரீக
> மன்ன முகத்தியர்
> முன்னே, நென்னல்,
>
> பொறிப்புண்ட ரீகம்
> போலும் ஒருவனால்
> புணர்ந்த மௌலி
>
> பறிப்புண்டும் வந்தி
> லாதான், இனிப்பொரும்
> பான்மை உண்டோ?

[மறிப்புண்ட — சிறையிலே மடக்கித் தள்ளப்பட்டிருந்த. மணிவரைத் தோளின் வைகும் — அழகிய மலை போன்ற ராவணன் தோளுக்கு உரியவர்களும். நெறிப் புண்டரீகம் அன்ன — புற இதழ் ஒடிந்து வளைந்த தாமரை மலர் போலத் தோன்றிய. முகத்தியர் — முகத்தையுடையவர்களுமான ராவணன் மனைவியர்.
நென்னல் — நேற்று.
பொறிப் புண்டரீ



கம் — உடலில் புள்ளிகளையுடைய புலி.
ஒருவனால் — ஒப்பற்ற சுக்கிரீவனால். புனைந்த மௌலி — ராவணன் அணிந்து கொண்டிருந்த கிரீடம். பறிப்புண்டும் — பறித்துத் தள்ளப் பட்டும். இனிப் பொரும் பான்மை உண்டோ — இனிமேல் போர் செய்யும் தன்மை உண்டோ!]

என்று இடிக்குரலில் அங்கதன் ஏசியதும் தெளிவாகக் காதில் விழத்தான் செய்கிறது.

'உன்னுடைய தர்பாரிலேயே மூக்கறுப்பாக நிகழ்ந்ததே என்னுடைய சிறிய தந்தையின் அந்தச் செயல்!' என்ற குறிப்புடன் பேசுகிறான் அங்கதன். 'தேவர் காண, உன் மனைவியர் காண நேற்று விளைந்த அவமானமல்லவா?' என்கிறான்.


ராவணனால் சிறையில் மடக்கித் தள்ளப்பட்ட தேவர்கள் கெஞ்சிக் கூத்தாடி விடுதலை பெற்றிருக்க வேண்டும். அவர்கள் கண் முன்னே ராவணனுக்கு மகுட பங்கம் நிகழ்ந்த தென்றால், மகுடமணிகள் பறிக்கப்பட்டன என்றால், என்ன பேரவமானம் அது! இதைக் குத்திக் காட்டுகிறான் அங்கதன்.

ராவணனுடைய வீரப் பிரதாபத்திலே நெஞ்சைப் பறிகொடுத்திருந்த காதலிகளும் காணவே அந்தக் கர்வபங்கம் நடந்ததாம். 'வளைந்த தாமரைப் பூக்களைப் போல் அந்த முகங்கள் உன் வீரத் தோளின் அழகைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எங்கள் மகாராஜாவின் சாதனை அது!'' என்கிறான் அங்கதன்.

'ராவண பத்தினிகள் காண, அடிமைத் தேவர்கள் காண, நேற்று எங்கள் மகாராஜா ஆட்டு மந்தையில் புலி பாய்வது போலப் பாய்ந்து வந்தாரே; வந்து, பொம்மை போல் அழகாய்க் கொலுவிருந்த உன் கிரீடத்தை அப்படியே தட்டிப் பறித்து, அந்த மணிகளோடும் திரும்பி விட்டாரே! அவரை அப்போதே தொலைத்து விடத் தொடர்ந்து வந்தாயா?' என்கிறான் அங்கதன்.

கச்சேரி முடியப் போகிறது

அப்போதும் வந்திலாதான் இனிப் போரும் போரும் உண்டோ! —என்பது பல்லவியாக வருகிறது. அநுபல்லவி சரணம் முதலான அம்சங்களுடன் இசை நிபுணன் கீர்த்தனை பாடுவது போல் அங்கத வாசாலகனும் ராவணன் வசையைக் கீர்த்தனம் செய்கிறான்.



பிறகு, 'இப்படியெல்லாம் சொல்லி வா என்று ராமன் ஏவி என்னை அனுப்பினான்' என்கிறான். கடைசியாகத் தன் வார்த்தைக்காகவும் 'அந்த இரண்டில் ஒன்றைச் செய்து விடு' என்கிறான்.

இப்போது தேவியை விட்டு விட்டால் ஆவியை விட வேண்டியதில்லை; இல்லாவிட்டால் தேவியையும் ஆவியையும் ஒருங்கே விட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. 'அப்படியானாலும் ஏன் இந்தத் தாமதம்!—இப்போதே என் பின்னே புறப்படு!' என்பது அங்கதன் வார்த்தை.

இந்த வார்த்தையை வெளியிடும் செய்யுள்:

'என்றிவை இயம்பி
வாஎன்(று) ஏவினன்
என்னை; எண்ணி
ஒன்(று)
உனக்(கு)
உறுவ(து)
உன்னித்
துணிந்(து)உரை;
உறுதி பார்க்கின்,

துன்றிருங் குழலை
விட்டுத் தொழுதுவாழ்;
சுற்றத் தோடும்

பொன்றுதி யாகில்,
என்தன் வாயிலிற்
புறப்ப(டு)' என்றான்.

[என்றிவை—என்ற இந்த வார்த்தைகளை. இயம்பி வா என்று — சொல்லி அந்த ராவணன் கருத்தைத் தெரிந்துகொண்டு வா என்று. ஏவினன் என்னை — என்னைக் கட்டளையிட்டு அனுப்பினான். எண்ணி — ஆகவே நீ ஆலோசித்துப் பார்த்து. ஒன்று உனக்கு உறுவது உன்னி — இரண்டிலே உனக்குத் தக்கது ஒன்றை நிர்ணயித்து. துணிந்து உரை — துணிந்து சொல்வாய். உறுதி பார்க்கின் — உயிருக்கு உறுதியான காரியத்தைப் பார்ப்பாயானால். துன்று இருங் குழலை — நெருங்கிய பெருங் கூந்தலையுடைய சீதாதேவியை. பொன்றுதியாகில் — இறந்து போகத் துணிந்து விட்டாயானால். என்தன் வாயிலின் — என் பின்னே இந்த அரண்மனை வாசலிலிருந்து.]

அங்கதப் பேருரை முடிந்துவிட்ட தென்றே தோன்றுகிறதல்லவா ! என்ருலும், 'இன்னும் ஒரே ஒரு வார்த்தையுடன் முடித்துக் கொள்கிறேன்' என்று வாசாலகன் கூறுவதுபோல் அங்கதனும் இன்னும் ஒரே வார்த்தையில் தன் பேருரையை முற்றுப் பெறச் செய்கிருன்.

ராவணன் எங்கும் போய்ப் பலரையும் வலியப் போருக்கு இழுத்துத் திக்விஜயம் செய்து பேரும் புகழும் பெற்றிருப்பவனல்லவா ! 'மண்ணிலும் வெற்றி, விண்ணிலும் வெற்றி; நீரிலும் வெற்றி, நெருப்பிலும் வெற்றி என்றெல்லாம் வெற்றி பெற்றிருக்கும் நீ, இப்போது உன் ஊருக்குள்ளே ஒளித்து கிடந்தா உயிர் விடப் போகிருய்!' என்பதுதான் இந்தப் பேருரையின் இறுதி வார்த்தை.

பேருரை முடிந்துவிட்டது என்ற உணர்ச்சியை,

'வாயிலிற் புறப்ப(டு)'
என்ருன்

என்ற செய்யுளின் முடிவே தெரிவிக்கிறது.

இந்த நிலையிலும், கோபப் பெருநெருப்பில் நெய்மழை பொழிவது போல, 'இன்னும் ஒரே வார்த்தை' என்ற பேச்சுத் தோரணையில் அங்கதன் பேசி முடிக்கிருன் :

'நீரிலே பட்ட,
சூழ்ந்த நெருப்பிலே
பட்ட, நீண்ட
பாரிலே பட்ட,
வானப் பரப்பிலே
பட்ட எல்லாம்
போரிலே பட்டு
விழப் பொருதநீ,
ஒளித்துப் புக்(கு) உன்
ஊரிலே பட்டாய்
என்ருல், பழி' என
உளையச் சொன்னுன்.

[நீரிலே பட்ட – நீரிலே காணப்படும் சக்தியும். சூழ்ந்த நெருப்பிலே பட்ட – சுற்றி வளைந்துகொள்ளும் இயல்புள்ள நெருப்பிலே பொருந்திய சக்தியும். நீண்ட பாரிலே பட்ட – நீண்டு விரிந்து கிடப்பதாகத் தோன்றும் பூமியிலே பொருந்தியுள்ள ஜனசக்தியும். வானப் பரப்பிலே பட்ட–சூட்சும சக்திகளான தெய்வ சக்திகளும். பொருத நீ – போர் செய்த நீ ஒளித்துப் புக்கு – புகுந்து ஒளிந்து கொண்டு. ஊரிலே பட்டாய் என்ருல் – ஊருக்குள்ளே 'உயிரோடு சாவு' என்று ஒளித்துக் கிடந்தாய் என்ருல்.]

இந்தப் பேருரை இப்படி முற்றுப் பெற்றதும் ராவண கோபம் ராவணுகாரமாகவே பெருகி விடுமல்லவா ? அந்தக் கோபம் எவ்வாறு பொங்கி என்ன செய்யப் போகிறது? அந்தக் கோபத்திற்கு இலக்கான அங்கதன் தன்னைச் சூழ்ந்து கொண்ட அந்தத் தீயினின்றும் எப்படித் தன்னை விடுவித்துக் கொள்ளப் போகிருன் ?



88. தேவியின் பவனி

அங்கதன் பேருரை ராவண கோபத்தைப் பெருங் கோபமாக மூட்டிவிட்டதென்று சொல்ல வேண்டுமா? அன்று அனுமன் தூது வந்து பேசிய பேச்சைக் கேட்டதும் சினம் வீங்கிய ராவணன், 'கொல்லுங்கள்' என்று கர்ஜித்தானல்லவா! அதற்கும் மேலான கோபம் இப்போது,—மறுபடியும் ஓர் இளங் குரங்கு வந்து கூசாது பேசி அவமானப் படுத்தி விட்டதே என்று.

தீயும் தீ நாக்கும்

அங்கதனை அப்படியே கொன்று விட்டாலும் இந்தச் சினம் தீர்ந்து போகுமா! 'பிடியுங்கள்; பூமியில் மோதி அடியுங்கள் – விரைவாக' என்று அலறுகிறான் ராவணன்.

துஷ்டப் பிள்ளைகள் நீர்ப்பாம்பைத் தரையில் மோதியடிப்பது போல் அங்கதனை அடித்துக் கொல்வதையும் கண்ணாரக் கண்டு களிக்க விரும்புகிறது ராட்சஸ உள்ளம்.

இதோ இந்தக் கோபத்தையும் கொடுமையையும் எப்படியோ அளந்து காட்டும் வாசகத்தைக் கேளுங்கள்:

சொற்ற வார்த்தையைக்
  கேட்டலும், தொல்உயிர்
முற்றும் உண்பது
  போலும் முனிவினன்,
'பற்று மின்கடி
  தில்; நெடும் பார்மிசை
எற்று மின்!' என
  நால்வரை ஏவினன்.

[சொற்ற – சொன்ன. தொல் உயிர் முற்றும் – தொன்றுதொட்டு வந்து கொண்டிருக்கும் உயிர்க் குலம் முழுவதையும். முனிவினன் – சினத்தை உடைய வனுகி. கடிதில் – விரைவாக. நெடும் பார் மிசை – பெரிய நிலத்தின் மீது. எற்றுமின் – மோதி அடியுங்கள்.]

'தொல்உயிர் முற்றும் உண்பது போலும் முனிவினன்' என்று உக்கிர கோபாவேச உச்சத்திலிருக்கும் ராவணனைக் காட்டுகிறான் கவிஞன். காட்டிவிட்டு, அந்தக் கோப எரிமலை கக்கும் தீயாக வரும் வார்த்தைகளையும் நமது செவிகளில் அப்படியே சுடச் சுட வந்து விழச் செய்கிறான்.

இச்செய்யுளின் வடிவம் நன்கு காணத் தக்கது.

பற்றுமின்!
எற்றுமின்!

என்று எதுகையில் வல்லோசை செறிந்து விழும் கட்டளைகள், எரிமலை சட்டென்று தீநாக்குகளை நீட்டிச் சடசட வென்று பேசுவது போன்ற ஓர் உணர்ச்சியை உண்டாக்குகின்றன.

'பற்றுமின்; எற்றுமின்' என்று கட்டளையிடுகிறானே அரக்கர்கோன் பல்லைக் கடித்துக் கொண்டு—அந்தப் பற்களின் 'நெறு நெறு' ஓசை கூடக் கேட்பது போலத் தோன்றுகிறது

உடனே நால்வர் வந்து பற்றிக்கொள்வதும், அவர்களையும் தூக்கிக் கொண்டு அங்கதன் உயரப் பாய்வதும், அந்த வேகத்திலே நால்வரும் தலை வேறு உடல் வேறாகச் சின்னபின்னமாவதும், அந்த

முண்டங்களைக் கோபுர வாசலில் காலால் மிதித்த வண்ணம் வானர ஸிம்மம் வீர கர்ஜனை புரிவதும் எவ்வளவு வேகமாக நடைபெறுகின்றன!

தீ வேகம்

கொடுங் காற்றின் கடு நட்புடன் பரவும் தீயின் படுவேகமும் 'தடபுடல்' களும், இந்த அதிசயச் செய்யுளின் அங்க லட்சணம்.

ஏவி னான்; பிடித்
 தாரை எடுத்தெழத்
தாவி னான், அவர்
 தம்தலை போயறக்,
கூவி னான், அவன்
 கோபுர வாசலில்
தூவி னான், துகைத்
 தான், இவை சொல்லினான்.

[ஏவினான்—மேலே சொன்னபடி ராவணன் ஏவினான். பிடித்தாரை—அந்த ஏவலுக்கு இணங்கத் தன்னை வந்து பிடித்துக் கொண்ட நால்வரையும். எடுத்து எழத் தாவினான்—அப்படியே தூக்கி எடுத்துக்கொண்டு உயரப் பாய்ந்தான் அங்கதன். அவர் தம் தலை போய் அற—அந்த நான்கு அரக்கர்களின் தலைகளும் அற்றுப் போகும்படி. தூவினான்—உதறித் தள்ளினான், துகைத்தான் – துவைத்தான்; மிதித்தான்.]

ராவணன் ஏவினது தான்! தாமதம், பளிச்சென்று நால்வர் அங்கதன் மேல் விழுந்து அமுக்கிப் பிடித்துக்கொள்வதைப் பார்க்கிறோம். பிடித்துக் கொண்டவர்களையும் எடுத்துக் கொண்டு எழும்பித் தாவும் அங்கதனைப் பார்க்கிறோம். இதற்குள்ளே அங்கதன் கர்ஜிப்பதைக் கேட்கிறோம்.

அங்கதன் இப்போது என்ன தான் சொல்லுகிறான்? யாரை நோக்கி?

'ஏமம் சார,
 எளியவர் யாவிரும்,
தூமம் கால்வன
 வீரன் சுடுசரம்
வேமின் போல்வன
 வீழ்வதன் முன்னமே,
போமின், போமின்
 புறத்தென்று போயினான்.

[ஏமம்—பாதுகாப்பு. சார—சாரும்படி; சேரும்படி. எளியவர் யாவிரும்—எளியவர்களான நீங்கள் எல்லாரும். தூமம் கால்வன—புகையை வெளியிடுவன. சுடு சரம் – சுடுகின்ற அம்புகள். வேமின் போல்வன – வெந்து எரிந்துவிழும் மின்னல் போல்வன. போமின் – போய்விடுங்கள். புறத்து – இந்த ஊருக்குப் புறமாக; இந்த ஊருக்கு வெளியே.]

எளியவர்கள் வீணுக உயிர் இழப்பதை அங்கதன் விரும்ப வில்லை. 'புகையைக் கக்கி, நெருப்பைக் கக்கி, மின்னல்போலப் பளிச்சுப் பளிச் சென்று வந்து விழப் போகின்றனவே ராம பாணங்கள்!' என்று பயமுறுத்துகிறான்.

'போய் விடுங்கள், போய் விடுங்கள்' என்று கூச்சலிட்டு எதிரிகளின் ஊக்கத்தையும் கட்டுப்பாட்டையும் குலைக்கப் பார்க்கிறான். 'போய் விடுங்கள்; ஊருக்கு வெளியே போய் விடுங்கள்' என்று சொல்லிக்கொண்டே தானும் போய் விடுகிறான் அங்கதன்.

இப்படிப் பூர்த்தியாகும் இந்தப் பாட்டின் அமைப்பு எத்தகைய எளிமையும் அதிசயமும் கலந்த சொல்லோவியம், பாருங்கள்!

எல்லாம் மின்னல் வேகம்

அங்கதன் பேசும் வேகமும், போகும் வேகமும், தாவும் வேகமும், வரப்போகும் ராமபாண வேகமும் எல்லாம் மனக் கண் கூச மின்னல்கள் போல் அலைகின்றன!

'போமின், போமின்
 புறத்தென்று போயினான்

என்பது இந்த 'வேக'ப் பாட்டின் 'முத்தாய்ப்பு.'

இப்படி ஒரு மின்னல் – தாக்கும் தாக்கி விட்டுக் கிளம்பி விடுகிறான் அங்கதன், ராமன் இருப்பிடம் நோக்கி. கிளம்புவதும் அங்கே போய்ச் சேருவதும் கூட ஒரு கணத்தில் நிகழ்வதுபோல் அவ்வளவு வேகமாய் நடைபெற்று விடுகின்றன.

அந்தரத்திலே, அது என்ன ஆரவாரம்! ஓஹோ, அங்கதன் கிளம்பிவிட்டானே!

வீரன்வெஞ் சிலையிற்
 கோத்த அம்பென
விசையிற் போனான்

என்று அங்கதன் வந்த விசை வருணிக்கப் பட்டதல்லவா! அதைக் காட்டிலும் முடுகிய விசையில் திரும்பிவிடுகிறான்.

குறியைத் தாக்கி வீழ்த்தி மீண்டும் கைக்கு வந்து சேரும் கருவி குறித்துக்

கேட்டிருக்கிறீர்களல்லவா! அதே ரீதியில் திருமாலின் சக்கராயுதமும் எதிரியைத் தாக்கிவிட்டுக் கைக்கு மீண்டு விடுகிறது என்பர். ராமபாணமும் அப்படித்தானும்.

அதே மாதிரி ராமன் அடியில் வணங்கி விடைகொண்ட அங்கதனும் மீண்டு,

வந்து விரன்
அடியில் வணங்கினுன்

என்று கவி முடிக்கிருர்.

வெண்ணிற மேனியில் செஞ்சந்தனம் பூசிக்கொண்டு – என் அப்பிக்கொண்டு, – வருகிருனும். தான் செய்த பயங்கரச் செயல்களுக்கு அறிகுறியாகவே இந்தக் கோலத்தில் வருகிருனும்.


உடம்பிலே செஞ்சந்தனம். ஆனுல் வெண்ணிற முகமோ மேலும் வெண்மை யாக—சந்திரிகையின் அமுத வெண்மை யாக—விளங்குகிறதாம்.

இந்தச் சித்திரத்தை மனத்திற் கொண்டு. அங்கதன் எழுந்த எழுச்சியை யும், பாய்ந்த பாய்ச்சலையும், வந்து இறங்கிய வைபவத் தையும், ராமன் அடிகளில் விழ்ந்து வணங்கும் பணி வையும் பார்க்க வேண்டும்.

இந்த அங்கதனைப் பார்த் துப் பார்த்துப் பூரித்துப் போ கிறது ரஸிக ருள்ளம், இந்தக் கவிதைக் கண்ணுடி யில்.

அந்த ரத்திடை
ஆர்த்தெழுந் தான் அவன்,
சிந்து ரத்தம்
துதைந்தெழும் செச்சையான்,
இந்து விண்ணின் (று)
இழிந்துள தாமென
வந்து, விரன்
அடியில் வணங்கினுன்.

[அந்தரத்திடை—அந்தரத்திலே. ஆர்த்து—ஆரவாரம் செய்து கொண்டு. சிந்து ரத் தம் – சிந்திய இரத்தத்தினுல். துதைந்து எழும் – நெருங்க எழுந்த. செச்சையான்—செஞ்சந்தனப் பூச்சை உடையவனுக. இந்து – சந்திரன். விண் ணின்று – விண்ணிலிருந்து. இழிந்துளதாம் என – கீழே வந்தது என்று கண்டோர் பிரமிக்கும்படி.]



'நால்வர் கோலேதான் இந்தச் சிவப்புச் சந்தனப் பூச்சிற்குக் காரணம்' என்பதை நாம் நன்கறிவோம். மதிலைத் தாண்டி அகழியைத் தாண்டி வருகிறவன் அந்த அகழி நீரில் இரத்தத்தைக் கூடக் கழுவிக் கொள்ளாமல் வருகின்ற வேகம் தான் என்ன! இறங்கி வரும் வேகம்தான் என்ன!

வந்து வீரன் அடியில் வணங்கும் இந்த வைபவத்திலே பொங்கும் பரிவையும் பணிவையும் என்னென்பது!

பார்மிசை வணங்கிச்
சேயம் விண்மிசைப்
படர்வ தேபோல்

சென்றவன், திரும்பி வந்து வீரனடியில் வணங்குகிறான். இதற்கிடையே முப்பது பாடல்களில் எவ்வளவு முக்கியமான நிகழ்ச்சிகள்! ஒரு குடத்திலே கடல்! ஓமகுண்டத்திலே ஒரு பெருங் காட்டுத்தீ!

ராமபாணம் விசையிற்போய் ராமன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டு திரும்பி வருவது போல் வந்து சேரும் அங்கதனைக் கண்டதும், ராமன் அப்படியே ராவணனுள்ளத்தைக் கண்டு கொள்ள விரும்புகிறான். 'அவன் உள்ளக் கருத்தெலாம்' விவரமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறான்.

அங்கதனுடைய வாக்கு வன்மை ராமன் அறியாததன்று. அந்த வாக்கினால் அரக்கர்கோனின் உள்ளக் கருத்தையெல்லாம் உள்ளபடி விவரமாக விளக்கிக் கொள்வது நன்றல்லவா!

ஆனால் இந்த வாக்கு வன்மை இப்போது எப்படித் தன்னை வெளியிட்டுக் கொள்கிறது!

உற்ற போ(து), 'அவன்
உள்ளக் கருத்தெலாம்'
கொற்ற வீரன்
'உணர்த்தெ'ன்று கூறலும்,
'முற்ற ஓதிஎன்?
மூர்க்கன் முடித்தலை
அற்ற போதன்றி
ஆசை அறான்' என்றான்.

[உற்ற போது – அங்கதன் வந்து சேர்ந்தபோது. அவன் – அந்த ராவணனது. கொற்ற வீரன் – வெற்றி வீரனாகிய ராமன். உணர்த்து – உணர்த்துவாய்; தெரிவிப்பாய். முற்ற ஓதி என் – முழுவதும் சொல்லி என்ன பயன். முடித் தலை– கிரீடம் அணிந்த தலை. ஆசை அறான் – ஆசை நீங்கப் பெறான்.]

எவ்வளவு சுருக்கமாக அங்கதனுடைய வாக்கு வன்மை இப்போது வெளிப்படுகிறது! ராவண சபையில் நீள முழங்கிய வாக்குத் திறன், இப்போது எப்படிச் சுருங்கச் சொல்லி ராவணன் உள்ளக் கருத்தை யெல்லாம் விளங்க வைத்து விடுகிறது!

டாக்டர் ஜான்ஸன், ஸ்காத்லந்து வாசி ஒருவனைக் கேட்டான், 'க்ராம்வெல் சாதித்த சாதனை தான் என்ன?' என்று. 'அந்தச் சாதனைகள் எவை எவை!' என்று நீளமாகப் பேசத் தெரியும் க்ராம்வெல் - பக்தனான அந்த மனிதனுக்கு. ஆனால் அவன் மிகவும் சுருக்கமாகவும் வேகமாகவும் க்ராம்வெல் – சாதனைகளைக் கூறி விளங்க வைத்து விட்டான்.

'அரசர் கழுத்தும் அற்றுப் போகக் கூடியதுதான். முடித் தலையை உடலிலிருந்து துண்டித்து எடுத்து விட முடியும்! இதை அரசர்களுக்கு உணர்த்தினான் க்ராம்வெல்' என்பதுதான் அந்தச் சுருக்கமான பதில்.

அந்த ரீதியில் அமைந்திருக்கிறது அங்கதன் விடையும். இந்த விடையும் ராமபாண வேகத்துடனும் சக்தியுடனும் பொலிகின்றது. இப்பாட்டு 'அங்கதன் தூது'க்கு ஓர் அதிசய முடி மணியாக அமைந்து விடுகிறது.

*   *   *

அங்கதன் தூது ஒரு சிறு படலம், நாற்பத்து மூன்று பாடல்களில். எனினும் இதற்குள்ளே கவிதாதேவி பவனி வரக் காண்கிறோம்.

கவிஞனது மனோபாவம் சுடர்ப்பொறிகளை வாரியிறைக்கிறது. கருத்துக்கள் அணியணியாகப் புறப்படுகின்றன. ஆழ்ந்தகன்ற நுண்ணறிவு, தேவியின் இரதம் செல்லப் பாதை அமைத்துக் கொடுக்கிறது. அழகுணர்ச்சி இருபுறமும் உள்ள வீதிகளை அலங்கரிக்கிறது; தோரணம் கட்டுகிறது; பூம்பந்தல் போடுகிறது.

அபாரமான புலமைத் திறன், பாதையைச் சுத்தம் செய்து நீர் தெளிக்கிறது; கோலம் போடுகிறது; சொன்ன சொன்ன பணிகளைச் செய்து முடிக்கிறது.

நகைச் சுவை, சோக ரஸம், காதல், பகைமை, நட்பு முதலான உணர்ச்சிகள் வாண வேடிக்கை நடத்துகின்றன; தீபாலங்காரங்கள அமைக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, ராவண சித்திரமும் அங்கத குணசித்திரமும் எப்படிப் போட்டி போடுகின்றன! இருவர் அறிவுச் சக்திகளும் தொந்தயுத்தம் புரிகின்றன. எல்லாம் தேவியின் பவனியை அணி செய்து சிறப்பிக்கின்றன.



89. அவளும் பொய் சொல்லாள்!

விபீஷணனது அனுமதியுடன் ராமன் அங்கதனைத் தூது அனுப்பினான். இந்த வானர வீரன் உருவெடுத்துச் செல்லும் நெருப்புக் கடவுள் போல் வானவீதியாகப் போய் ராவணனுக்குச் சமீபத்தில் இறங்கித் தன்னைத் தெரிவித்துக் கொண்டான். தூது வந்த செய்தியைக் கடுமையாக அறிவித்துக் கொண்டான். கோபம் கொண்ட ராவணன் அங்கதனைப் பற்றிக் கொண்டு வதஞ் செய்யுமாறு மந்திரிமாரை நோக்கிக் கட்டளையிட்டான். உடனே நாலு பேர் பிடித்துக் கொள்ள, அப்படியே அங்கதன் ராவணனுடைய மாளிகையின்மேல் பறவை போலக் கிளம்பி அந்த நால்வரையும் உதறித் தள்ளி விட்டு, அம் மாளிகைச் சிகரத்தையும் இடித்துத் தள்ளினான். அப்படி அரக்கருள்ளங்களில் குழப்பம் விளைத்த பின் வானர சேனையின் நடுவில் வந்து குதித்து வானர உள்ளங்களைக் குதூகலப் படுத்தினான். இது வால்மீகத்தில் அங்கதன் தூது மிகவும் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வித்திலிருந்து ஒரு சிறு கர்பகச் சோலையைக் கலை யுலகின் ஓர் அற்புதமாக வளர்த்துக் காட்டுகிறான் கம்பன். அபாரமான கலைத் திறனும் மந்திரக் கவிதையும் மனோபாவமும் இசைப் பண்பும் அந்த அற்புதத்தைச் செய்து முடித்திருக்கின்றன.

ஆதி காவியப் போக்கு

அங்கதன் தூது வால்மீகத்திலே ஒரு தனிச் சர்க்கமும் அன்று; 41-ம் சர்க்கத்தினிடையே அந்தச் சர்க்கத்தின் மூன்றிலொரு பகுதியாகிச் சுருக்குண்டு நெருக்குண்டு காணப்படுவது தான்.

இந்தச் சர்க்கத்தின் தொடக்கத்திலே, சுக்கிரீவன் செய்கையை ராமன் உடன்படாது கூறுவதும், அதற்குச் சுக்கிரீவன் விடை கூறுவதும் இடம் பெறுகின்றன. அதையடுத்து, ராமன் லட்சுமணனிடம் சேனைகளைச் சித்தப்படுத்தச் சொல்லி அக்குன்றிலிருந்து கீழே இறங்குவது விவரிக்கப்படுகிறது. பிறகு, இலங்கையை முற்றுகையிடுவது வருணிக்கப்பட்ட பின்பே அங்கதன் தூது பிரஸ்தாபிக்கப்படுகிறது.

இந்தத் தூது வால்மீகியின் கவனத்தையோ, கலைத் திறனையோ சிறப்பாகப் பெற்றிருக்கவில்லை யென்பது வெளிப்படை. இந்தத் தூது முடிந்தபின் இதே படலத்தில் யுத்த ஸந்நாகம் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

அங்கதன் தூது சொல்லி மீண்டதைக் கண்டதும், ராமன் மகிழ்ச்சியால் அட்டகாசம் செய்யும் வானர வீரர்களால் சூழப்பட்டவனாய்த் தன்னுடைய எதிரியை வதைக்கத் தீர்மானித்து, போரைப் பேராவலுடன் எதிர்பார்த்து நிற்கிறான். இங்கே ராமன் அங்கதனிடம் பேச்சுக் கொடுத்ததாகவே யில்லை; ராவணனுடைய உள்ளக் கருத்தைத் தெரிந்து கொள்ளும் முயற்சியே காணப்படவில்லை.

வால்மீகத்திலே அங்கதன் தூது, அங்கதனைச் சொல்லின் செல்வனாகக் காட்டவில்லை. அங்கத குணாதிசயத்தை வளர்த்துக் காட்டுவதற்கும் இது ஒரு வாய்ப்பாகப் பயன்படவில்லையென்றே தோன்றுகிறது.

வாலி மகனுக்கு ஒரு முக்கிய — நம்பிக்கைக்குரிய – ஸ்தானம் கொடுக்க உதவுகிறது இந்தச் சந்தர்ப்பம் என்று சொல்லலாம். ஆனால் அங்கதன் தெற்கு நோக்கி

வந்த வானரப் படைக்குத் தலைமை வகித் ததிலேயே இத்தகைய ஒரு ஸ்தானம் ஏற்கெனவே இவனுக்குக் கிடைத்து விட்டதல்லவா!

ஆதி காவியப் போக்கின்படி, அங்கதன் திரும்பிய பின் அதிக வல்லமையுள்ள — மலைச் சிகரம் போன்ற உடம்போடு கூடிய — ஒரு வானர வீரன் சுக்கிரீவனுடைய கட்டளைப்படி ராவணனுடைய கோட்டை யின் நான்கு வாசல்களையும் அடிக்கடி சோதித்துப் பார்த்துக் கொண்டு நிற் கிறான். வேண்டிய வடிவம் கொள்ளும் ஆற்றலுள்ள வானரர் பலர் இந்த வீர னைச் சூழ்ந்து கொண்டு உதவி செய்கிறார் கள்.

வானரப் படைகள் எல்லையில்லாமல் இலங்கையை வளைத்துக் கொண்டது கண்டு அரக்கர்களில் தைரியசாலிகள் ஆச் சரியமடைகிறார்கள். அவ்வளவு தைரிய மில்லாத சிலர் பயந்தே போகிறார்களாம்.

மேலும் வருணிக்கிறார் வால்மீகி இந்த யுத்த ஸந்நாகத்தை. வேறு சில அரக்கர் கள்—போர் வெறியர்கள்—களிப்புறுகிறார்க ளாம். மதிலுக்கும் அகழிக்கும் இடையே ஊசி நாட்ட இட மில்லாமல் வானரர்கள் பரவியிருப்பது கண்டு சில அரக்கர்கள் அச்சத்தால் மெய்ம்மறந்து 'ஹா, ஹா' என்று அலறுகிறார்களாம்.

இப்படி லங்காபுரியில் பயங்கரமான கோலாகலம் அதிகரித்ததும், அரக்க வீரர்கள் ஆயுதபாணிகளாகி ஊழிக் காற் றைப் போல் அங்குமிங்கும் சஞ்சரிக்கத் தொடங்குகிறார்களாம்.

இப்படி யுத்த ஸந்நாகம் வருணிக்கப் பட்டு, இந்த 41-ம் ஸர்க்கம் முற்றுப் பெறுகிறது. இந்த யுத்த ஸந்நாகத்திற் கும், ஸர்க்க ஆரம்பத்திலே வரும் சுக்கி ரீவ ராவண சம்பாஷணை, தம்பிக்கு ராமன் கட்டளை, இலங்கையை முற்றுகை யிடு தல் ஆகிய நிகழ்ச்சிகளுக்கும் இடையே குறுகிக் காணப்படும் அங்கதன் தூது தான் ஓர் அற்புத வசீகரம் வாய்ந்த கம்ப சித்திரமாகப் பரிணமித்திருக்கிறது.

வால்மீகத்திலே யுத்த காண்டத்தின் 42-ம் ஸர்க்கம் யுத்த ஆரம்பமாகும்—அதாவது, வானரரும் அரக்கரும் போர் புரியத் தொடங்குதலைக் குறிப்பதாகும். ராமன் சேனையுடன் முற்றுகை செய்வதை அறிந்து கொண்ட ராவணன் கலங்குவ தும், தேறுவதும், ராமன் சீதையை நினைத்துக் கலங்கிப் பிறகு பகைவரை அழிக்குமாறு சேனையை ஏவுவதும் இந்தச் சர்க்கத்தின் தொடக்க நிகழ்ச்சிகள்.

வானர சேனைகள் பல பாகங்களாகப் பிரிந்து லங்கை நகர மதில்களில் ஏறத் தொடங்குகிறார்கள். மரங்களாலும், மலைப் பாறைகளாலும், கைக் குத்துக் களாலும் வெளி வாசல்களை அழிக்கிறார் கள்; மண்ணாலும், பாறைகளாலும், புல் லாலும், மரக் கொம்புகளாலும் அகழி களைத் தூர்க்கிறார்கள். வானரர்களில் பிர சித்த வீரர்கள், மதிலை ஒரு பக்கத்தில் இடித்து விடுகிறார்கள்.

வடக்கு வாசலை ராமனும் லட்சுமண னும் சுக்கிரீவனும் முற்றுகை செய்கிறார் கள். விபீஷணனும் கதாயுதமும் கையு மாக வந்து நிற்கிறான். ராவணன் தனது எல்லாச் சேனைகளையும் சடிதியில் புறப் படுமாறு கட்டளை யிடுகிறான்.

அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் பயங்கரமான சண்டை தொடங்குகிறது. இந்திரஜித்து அங்கதனோடு சண்டை செய்யத் தொடங்குகிறான். வானரவீரர் களில் பலரும் பல அரக்க வீரர்களுடன் தொந்த யுத்தம் செய்யத் தொடங்கு கிறார்கள்.

அரக்கர்கள் ராமன் மீதும் பாணங் களைப் பிரயோகிக்கிறார்கள். அப்படி மதி இழந்தவர்கள், ராம பாணத்தால் தங்கள் தலைகளையும் இழந்து விடுகிறார்கள். அந் தப் போர்க்களம் விரைவில் முறிந்து விழுந்த ஆயுதங்களாலும், ஒடிந்த தேர்க ளாலும், உயிரிழந்த வீரர்களாலும், யானை குதிரைகளாலும் நிரம்பிப் பயங்கரமாகத் தோன்றுகிறது.

இரவுப் போர்

இரவிலும் யுத்தம் நடப்பதாக 44-ம் சர்க்கம் அறிவிக்கிறது. இரவு தங்களுக்கு அனுகூலமானதென்பது அரக்கர் நினைப் பும் அனுபவமும். 'கொல்லு, வெட்டு, வா, ஏன் ஓடுகிறாய்' என்ற இவ்வகைச் சத்தங்கள் இருட்டில் கேட்கின்றன.

இராப் போரில் வானரர்களின் உயிரை வாங்கி விடுவோம் என்று செருக்குற்று வந்த அரக்க சைனியத்தை வானர வீரர்கள் கலக்கி விடுகிறார்கள், கண் ணுக்கு நன்றாய்த் தெரியாத அரக்கர் களையும் அந்த இருட்டில் ராம பாணங் களும் லட்சுமண பாணங்களும் வதைத் துத் தள்ளுகின்றன.

பேரிகைகள், சங்குகள் முதலான வாத்தி யங்கள் போர் வெறியைத் தூண்டி விடு கின்றன. படுகளம் இரத்தச் சேறாகி விடு கிறது. அந்த இரவு அரக்கர்களையும் வானரர்களையும் ஒருங்கே ஒழிக்க வந்த



ஊழிக் கால இரவுதானோ என்று எண்ணும்படி அவ்வளவு பயங்கரமாய்த் தோன்றுகிறது. அம்பு மழைகள் பொழிகின்றன. இரத்த அருவிகளும் ஆறுகளும் பெருகுகின்றன.

அரக்கர்கள் இப்போது கூட்டங் கூட்டமாகக் கூச்சல் போட்டுக் கொண்டு ராமனை நோக்கி ஓடி வருகிறார்கள். ஏழு கடல்களும் ஊழிக்கால இரவில் சேர்ந்து கோஷிப்பது போன்ற கூச்சல்களுக் கிடையே, நெருப்பைக் கக்கிக் கொண்டு ராம பாணங்கள் வந்து விழுகின்றன. ஆறு அரக்க வீரர்கள் அடியுண்டு அந்தப் படுகளத்தை விட்டு ஓடிப் போய் விடுகிறார்கள்.

நாலு திசைகளிலும் மூலைத் திசைகளிலும் பறக்கின்றன ராம பாணங்கள், நெருப்பு ஜ்வாலைகள் போல. அரக்கப் பூண்டே இல்லாதபடி எரித்து விடுகிறதோ என்று தோன்றுகிறது. தீயின் முன் விட்டிற்பூச்சி படும் பாடு படுகிறார்கள் அரக்கர்கள்.

இந்திரஜித்தின் வெற்றி

இதற்கிடையே அங்கதன் இந்திரஜித்தை நெருங்கியவனாய்த் தேர்ப்பாகனை

யும் குதிரைகளையும் அறைந்து கொல்லுகிறான். இந்திரஜித்து உடனே இரதத்தை விட்டுவிட்டு அந்த இடத்திலேயே மறைந்து போகிறான் மாயமாக.

வாலி மகனது வீரச் செயல்களை ராம லட்சுமணரும் பாராட்டுகிறார்கள். சுக்கிரீவன் மகிழ்ச்சி சொல்லுக்கு அடங்காது. விபீஷணனுக்கு வெகு சந்தோஷம். (இப்படி இங்கே வாலி மகனுக்கு ஒரு முக்கிய ஸ்தானம் அளிக்கப்படுகிறது.)

ராமன் வானரர்களை நோக்கி, 'வர பலங்களைப் பெற்றிருக்கும் இந்திரஜித்து உங்களிடம் சிக்கிக்கொண்டான்; அவனை இப்பொழுதே நாசம் பண்ண வேண்டும்' என்கிறான்.

இந்திரஜித்தோ மறைந்து நின்றபடியே இடிகளை விடுவது போல் பாணங்களைப் பிரயோகிக்கிறான். நாக பாசத்தால் ராம லட்சமணரைக் கோபங்கொண்ட இந்திரஜித்து விரைவாகக் கட்டி விடுவதாய் இந்த 42-ம் சர்க்கம் தெரிவிக்கிறது.

வேறுபாடும் மாறுபாடும்

இப்படி யுத்த ஆரம்பத்திலேயே இந்திரஜித்தையும், நாக பாசத்தையும் கொண்டு வந்துவிடுகிறார் வால்மீகி. கம்ப ராமாயணத்திலோ யுத்த ஆரம்பத்தில் இந்திரஜித்து வரவுமில்லை; வெற்றி பெறவுமில்லை.

ராமனும் ராவணனும் போர் புரிவதாகவே 'அங்கதன் தூது' படலத்தை அடுத்துவரும் 'முதற் போர்புரி படலம்' தெரிவிக்கிறது. இதற்கு அடுத்த படலத்தில் கும்பகர்ணன் போர் செய்வதும் வதமாவதும் விவரிக்கப்படுகின்றன. இப்போதும் இந்திரஜித்து வரவில்லை.

கும்பகர்ணன் ராமனோடு போர் புரிந்து கொண்டிருக்கும்போது, தனக்கு அவனால் வெற்றி கிடைப்பது நிச்சயமென்று நம்பும் ராவணன், மாயையால் உண்டாக்கிய ஜனகனைச் சிதைக்குக் காட்டி அவளை மயக்கப் பார்க்கிறான். அச்சமயம் ராமன் கும்பகர்ணனைக் கொன்று விடுகிறான். அது கேட்டு ராவணன் பிரலாபித்து அப்பால் செல்வதுடன் 'மாயாசனகப் படலம்' முற்றுப் பெறுகின்றது. இந்த நிலையிலும் இந்திரஜித்து வந்து சேரவில்லை.

அதிகாயன் என்ற ராவண புத்திரன் தான் போர் செய்ய முற்பட்டு வதமாகிறான். அதிகாயன் வதமாகி, நராந்தகன் முதலானவர்களும் வதமான பின்பு தான் இந்திரஜித்து வருகிறான்; நாக பாசத்தை வீசுகிறான். இந்த 'நாக பாசப் படல'த்திற்கும் முதற் போரைக் கூறும் படலத்திற்கும் இடையே மூன்று பெரிய படலங்களும் பல முக்கிய நிகழ்ச்சிகளும் குறுக்கிடுகின்றன கம்ப ராமாயணத்திலே.

யுத்த ஆரம்பத்திலே, நாக பாசத்தால் இந்திரஜித்து ராம லட்சுமணர்களைக் கட்டுவதாகக் கூறுவது கம்பனது கதைப் போக்கிற்கோ, கவி யுள்ளத்திற்கோ, காவியக் கட்டுக்கோப்பிற்கோ பொருந்துவதன்று. போர்த் தொடக்கத்தில் ராமனுக்குத் தோல்வி காட்டுவதற்கு மாறாக வெற்றி காட்டவும், ராமனது கருணையோடு கூடிய பேராண்மையை வற்புறுத்தவும் ஆசைப்படுகிறது கம்பனுள்ளம்.

ராவணன் ராமனோடு போர் புரிந்து சலித்து நிராயுதபாணியாக நிற்பதையும், 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா' என்று ராமன் கூறுவதையும் வருணிக்கும் கம்ப சித்திரத்தை இலக்கிய உலகம் மறக்க முடியாது. கம்பனது சித்திர சாலையிலே யுத்த காண்டம் என்ற ஓவியப் பேரரங்கை முற்பகுதியில் அணி செய்யும் ஒரு மகத்தான சித்திரத்தைக் காண்கிறோம் 'முதற் போர்புரி படல'த்தின் இறுதியில்.

இப்படி முதல் நாள் யுத்தத்தை வருணிப்பது, ராமனுக்கு மட்டுமல்ல, ராவணனுக்கும் நீதி செலுத்துவதேயாகும். பல அரக்கர்களைப் பலி கொடுத்த பிறகு போர் புரிய வருவதைக் காட்டிலும், அந்த உயிர்ச் சேதங்களைக் கூடுமானால் தவிர்த்துத் தானே ராம லட்சுமணர்களை முறியடிக்க முற்படுவது ராவண வீரத்திற்கும் பொருத்தமானதுதானே.

வால்மீகத்திலோ முதற் போரிலேயே இந்திரஜித்து நாகபாசத்தால் ராம லட்சுமணர்களைக் கட்டிவிட, ராமன் தன் வில்லையும் கைநழுவ விட்டுச் சாய்ந்து விடுகிறான். லட்சுமணனும் மூர்ச்சித்துப் போகிறான். ராவணன் சீதையைப் புஷ்பகத்தில் ஏற்றிக்காட்டுகிறான். சீதை புலம்புகிறாள்.

இந்த நிகழ்ச்சிகளைச் சில சர்க்கங்களில் சொல்லி விட்டுப் பத்துச் சர்க்கங்களுக்குப் பின்புதான் ராவணன் தானே போருக்கு எழுவதும், ராமன் ராவணனை மகுட பங்கம் செய்து, 'இன்று போய் நாளை உன் சேனையோடு வா' என்று கூறுவதும் நிகழ்கின்றன.

இந்தக் கதைப் போக்கை எப்படி மாற்றிக் காட்டுகிறான் கம்பனது கலைவாணி! ஆம்: 'நானும் அறியேன்; அவரும் பொய் சொல்லார்!' என்பதுதானே நம் கவிச் சக்கரவர்த்தியின் நிலை!

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ

90. தும்பை சூடுதல்

'தலை அற்றபோது அன்றி, ஆசை அறான்' என்று அங்கதன் செய்தி சொன்னது தான் தாமதம், வானரர் பாசறையில் போர்முரசுகள் முழங்கத் தொடங்கி விட்டன. இலங்கைக் கோட்டை வாசல் தோறும் அணி வகுத்து நிற்குமாறு வானர சேனைக்குக் கட்டளை யிடப் பட்டது.

தடைப்பட்டு ஓடும் கவிதை

அகழியைத் தூர்க்க வேண்டு மென்றும், அரக்கர்களை இயங்க முடியாமல் தடுக்க வேண்டுமென்றும், அதே சமயம் 'போருக்கு வாருங்கள், வந்து பாருங்கள்' என்று அவர்களை அறை கூவி அழைக்க வேண்டு மென்றும், கொடி நாட்டிய மதில்களின் சிகரத்தைக் கைப் பற்றிக் கொள்ள வேண்டு மென்றும் கட்டளைகள் இடப்பட்டன.

வானரப் பெருஞ் சேனை கடல் போன்ற அகழியைத் தூர்க்கத் தொடங்கியதும், அந்த வெள்ள நீர் இலங்கை வாசல் வழியாக உட் புகுந்து ஊரை வளைந்து கொண்டது. அகழி தூர்த்த வானரங்கள் மதில் மீது ஏறி, அங்கே காவலாக இருந்த அரக்கர் படைகளை அழித்து ஆரவாரம் செய்தன.

அரக்கர்களும் போருக்கு எழுந்தனர். சங்குகள் முழங்கின. தேரில் கட்டிய மணிகளும், யானைகளின் இரு புறத்திலும் கட்டிய மணிகளும் கணீர் கணீரென்று ஒலித்தன. குதிரைகள் பூண்டிருந்த 'கிண் கிணி' மாலைகளும் 'கிண் கிண்' என்று ஒலித்தன.

வானர சேனை அரக்கர் சேனையை எதிர்த்துத் தாக்கியது. வானரர்கள் மரங்களையும் கற்களையும் கொண்டு தாக்க, அரக்கர்கள் வேலும் வில்லும் பிடித்து வந்து தாக்கினர். கற்கள் தலைகளை உடைத்தன; மூளைகளைச் சிதறடித்தன. அம்புகள் பாயப் பாய, இரத்த நீர் பாய்ந்து, பெருகியது. கற்களோடு குரங்குகள் உருண்டு விழுந்தன. வேல்கள் குத்த விழுந்து மடிந்த குரங்குகளும் பல.

வானரங்கள் கை கால்களையும் நகங்களையும் பற்களையும் கூடப் போர்க் கருவிகளாகப் பயன்படுத்திக் கொண்டன. அரக்கர்களோ பூண்கட்டிய தண்டாயுதம் தோமரம் முதலான போர்க் கருவிகள் பலவற்றையும் உபயோகித்தனர். இப்படி நடக்கிறது மதில்—உச்சியில் போராட்டம்.

பொன்மயமாக இருந்த இலங்கை மதில் இரத்த நீரில் தோய்ந்து பவழ மயமாகக் காட்சியளிக்கிறது. கடைசியாக வானரங்கள் வலியொழிந்து அரக்கர் எதிர்ப்பைச் சமாளித்துக்கொள்ள முடியாமல் வெளிப்புறமாய்க் கீழே இறங்கி விடுகின்றன.

இப்போது மதில் மீது முன்போல் அரக்கர்களே நிரம்பி யிருக்கிறார்கள். வானரசேனை ஓடுவதைக் கண்டு இவர்கள் ஆரவாரஞ் செய்தனர்.

இந்த வெற்றிக்குப் பின் ராட்சஸ சேனைகள் கோட்டையின் நான்கு வாசல்கள் வழியாகவும் வெள்ளமிட்டு வெளிப்பட்டு, வெளிப்புறத்திலுள்ள வானரரையும் ஒழிக்க முயல்கின்றன. இப்படி அரக்க வீரர்கள் வந்து நெருக்கவும், வானரப் பெருஞ்சேனை நிலைகுலைந்து சுக்கிரீவ மகாராஜா இருந்த இடத்திற்கே பின் வாங்கிப் போய்விடுகிறது.

சுக்கிரீவன் மராமரம் ஒன்றை ஏந்திக் கொண்டு போர் செய்ய முற்படுகிறான்.

அது கண்ட வானர வீரர்கள் கொஞ்சம் உத்ஸாகமடைந்து தங்களைத் துரத்தி வந்த அரக்கர்களை எதிர்த்து அவர்களை மிகுதியாகக் கொல்கிறார்கள்.

வானரச் சேனையால் அரக்கர் சேனை தகர்ந்தது போலத் தோன்றியதும், வச்சிரமுஷ்டி யென்னும் அரக்கன் முன் வந்து உக்கிரமாகப் போர் செய்கிறான். ஆனால் சுக்கிரீவன் இந்த அரக்கன் தேர் மீது எழும்பிப் பாய்ந்து இவனைக் கொன்று விடுகிறான்.

இப்படி 'முதற் போர்புரிபடல'த்தில் 54 பாடல்கள் இந்தப் போரை வருணிக்கின்றன. சாதாரணமான பாடல்கள்; சில, சர்வ சாதாரணமானவை.

இனி, இதோ பாருங்கள் வச்சிர முட்டியின் வீழ்ச்சியை :

மலைகு லைந்தென
வச்சிர முட்டிதன்

நிலைகு லைந்து
விழுதலின், நின்றுளார்

குலைகு லைந்து
கொடிநகர் நோக்கினர் ;

அலைகி ளர்ந்தென
வானரம் ஆர்த்தவே

[குலைந்தென — குலைந்தாற் போல. நின்றுளார் — அவனுடன் நின்ற அரக்கர்கள். குலைகுலைந்து — நடு நடுங்கி. கொடிநகர் — கொடி கட்டிய நகரம். அலை கிளர்ந்தென — அலை கொந்தளித்து எழுந்தாற்போல. ஆர்த்தவே — ஆரவாரம் செய்தன.]

என்ற பாட்டிலே தான் குலைந்து போன கவித் திறன் சற்றுக் கிளர்ந்து எழுவது போலக் காண்கிறது.

கிழ வாசலில் அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் விளையும் போரை வருணிப்பதில் பன்னிரண்டு செய்யுள்கள் முனைந்து நின்றும் கவித் திறனுக்கு வெற்றிகிட்டவில்லை.

மேலும் பதினொரு பாடல்கள் வானரர்களைப் பிரகஸ்தன் என்னும் அரக்கன் பறக்கடித்து நீலனுடன் நேர்ந்த போரில் உயிரிழப்பதை வருணிக்கின்றன. இந்தக் கவிதைகளில் தான் கொஞ்சம் வேகம் ஏற்படக் காண்கிறோம்.

தெற்கு வாசலில் அங்கதனால் அரக்கர் தலைவனாகிய சுபாரிசன் கொல்லப் படுவதும், மேற்கு வாசலில் அநுமனால் துன்முகன் அழிவதும் சாதாரணமாகவே வருணிக்கப் படுகின்றன.

ஒற்றர்கள் ராவணனிடம் வந்து நாலு திசை வாசல்களிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அறிவிக்கிறார்கள். இந்த நாலு திசைத் தூதுவர்களும் சொல்லும் ஒரே கதை தோல்விதான்.

எனினும் இவர்களது பேச்சுத் திறனுக்குத் தோல்வி இல்லை. நகைச் சுவையுடன் பேசுகிறார்கள். ஒரு தலைவன் (பிரகஸ்தன்) புழுதியில் விழுந்ததாகவும், அவன் உயிரோ விண்ணில் புகுந்ததாகவும் சொல்லுகிறார்கள்.

சுபாரிசன் என்ற தலைவன் தென் திசையில் பலியானதை அறிவிக்கும்போது, அவனுடன் போன அரக்கர்கள் இப்போது எங்கே போய்விட்டார்களோ, அந்த விலாசத்தை அறியோம் என்கிறார்கள்.

'பொன்றி னான்அச்
சுபாரிசன்; போயினர்

இன்று போன
இடம்அறி யோம்!' என்றார்.

[பொன்றினான் — இறந்தான். போயினர் — அவனுடன் போயிருந்த அரக்கர்கள்.]

மேற்கு வாசலில் துன்முகக் குன்றம் விழுந்து விட்டது என்கிறார்கள். இப்படி ஒருவகை நகைச் சுவையுடன் அந்த நிகழ்ச்சிகளை ஒற்றர்கள் தெரிவிக்க, ராவ



ணுரே அந்த ஹாஸ்யத்தை அனுபவிக்கும் நிலையில் இப்போது இல்லை.

உண்மையில், கவிஞன் தன்னை இப்படியெல்லாம் ஒருவாறு உத்ஸாகப் படுத்திக்கொண்டு, அங்கதன் தூதை வெற்றி பெற முடித்த அந்தச் சோர்விலிருந்து விடுவித்துக் கொள்ள முயல்கிறான் என்றே தோன்றுகிறது.

ராவணனோடு கவிதையும் வெறி கொள்கிறது.

ஒற்றர் சொல்லைக் கேட்டு ராவணன் சோர்ந்து பெருமூச்செறிவதை வருணிக்கும் பாட்டில், கம்பன் கவி வாணி சோர்வின்றி மூச்சுவிடுவதைப் பார்க்கலாம்:

என்ற வார்த்தை,
எரிபுகு நெய்யெனச்
சென்று சிந்தை
புகுதலும், சிற்றத்தி
கன்று கண்ணின்
வழிச்சுடர் கான்றிட,
நின்று நின்று
நெடிதுயிர்த் தான ரோ.

[எரிபுகு நெய் என – நெருப்பில் பெய்த நெய் போல. கன்று கண்ணின் வழி – கோபக் குறிப்பைக் கொண்ட கண்ணின் வழியாக. சுடர் கான்றிட – சுடர்ப் பொறிகளைக் கக்க.]

தடைப்பட்டுத் தடைப்பட்டுப் பெருமூச்செறியும் ராவணன் முகத்தை அந்தச் சீற்றத் தீயுடனும் கண்களுடனும் இந்தப் பாட்டில் காண்கிறோம் என்பதில் ஐயமில்லை.

இப்படி நெருப்பை மூச்சாகவிடுகிறவன், 'பிரகஸ்தனைக் கொன்றவர் யார்?' என்று கேட்கிறான். நீலன்தான் அவனுக்குக் காலனாகி விட்டான் என்று பதில் சொன்ன ஒற்றர்கள், மறுபடியும் சற்று நகைச்சுவையுடன் அந்தப் பிரகஸ்தனோடும் போயிருந்த அரக்கர்களில் எல்லாம் தாங்களே புத்திசாலிகளாகவும் அதிர்ஷ்டசாலிகளாகவும் திரும்பி வந்துவிட்டதாகப் பதில் சொல்லுகிறார்கள். ராவண கோபம் ஜொலிக்கிறது பிரமாதமாக.

அந்த அரக்கருடைய நகைச்சுவை தோய்ந்த கோழைத்தனமும், ராவண



கோபாவேசமும் ஓர் அதிசயப் பாட்டா கின்றன :

'அன்ன வன்றெடும்
போன அரக்கரில்
நன்ன கர்க்கு
வந்தோம்லைய, நாங்களே!'
என்ன என்ன,
எயிற்(று) இகல் வாயினைத்
தின்னத் தின்ன,
எரிந்தன திக்கெலாம்.

[அன்னவன்றெடும் – அந்தப் பிரகஸ்தனேடும். என்ன என்ன – என்று சொல்லச் சொல்ல. எயிறு இகல் வாயினைத் தின்னத் தின்ன – ராவணனுடைய பற்கள் வலிய வாயைப் பல முறை கடித்துக் கொள்ள.]

'திக்கெல்லாம் எரிகின்றனவோ இந்தக் கோபத்தீயால்!' என்று தோன்றுமாறு ராவணன் உறுக்கிப் பார்த்த அந்தப் பார்வைக்கு முன்னிற்க மாட்டாமல் அருகிருந்த அரக்கர்கள் அப்படியே ஓடிப் போகிறார்களாம். ராவணனே பித்துப் பிடித்தவனைப் போல், 'மரக்கிளையும் கையுமாக வந்த குரங்கினுல் கொல்லப்பட்டானே உயர்ந்த படையையுடைய பிரகஸ்தன்!' என்று புலம்பிக்கொண்டிருக்கிறுன்.

இந்தச் சோகப்பித்து, எவ்வளவு பொருத்தமான கவிதாருபம் பெற்றிருக்கிறது :

மாடு நின்ற
நிருதரை வன்கணுன்
ஓட நோக்கி,
'உயர்படை யான்,மற்(று)அக்
கோடு கொண்டு
பொரும் அக் குரங்கினுல்
விடி னுன்!' என்று
மீட்டும் விளம்பினுன்.

[மாடு நின்ற – பக்கத்தில் நின்ற, நிருதரை – அரக்கரை. வன்கணுன் – கொடுங் கண்களை உடைய ராவணன். அக்கோடு கொண்டு – அந்த மரக்கிளை கொண்டு, பொரும் அக் குரங்கினுல் – போர் செய்த அந்தக் குரங்கினுல். விடினுன் – இறந்தான்.]

'இந்திரன் வாழ்வை வேரோடு அழித்தவன் பிரகஸ்தன்; அந்த வாழ்வை இப்போது ஒரு குரங்கு அழித்து விட்டது என்று பொருள் படப் பேசினுர்களல்லவா ஒற்றர்கள்! 'அந்தச் சொல் கொடுஞ் சொல்' என்கிறுன் ராவணன். அந்தத் தீச் சொல் தன் செவியையும் சுட்டு நெஞ்சையும் சுட்டுவிட்ட தென்று பிரலாபிக்கிறுன்.

பிரகஸ்தன் சாவும் அந்தச் சோகமும் ராவணனைச் சவுக்கடி கொடுத்துத் துரத்துகின்றன போர்க்களத்திற்கு.

தேவேந்திரன் தன் பெருவலிமையைப் பறிகொடுத்து இந்தத் தேரையும் ராவணனுக்குக் கொடுத்தானும். இப்படி இந்திரனிடம் பெற்றுக்கொண்ட இதே தேரில் ராவணன் வானவர் தேசமெங்கும் திரிந்து அந்தப் பொன்னுட்டை யெல்லாம் பாழாக்கினுனும். இது ராவணன் ஏறிய தேரின் சிறப்பு :

தேயம் எங்கும்
திரிந்தது ; திண் திறல்
சாய, இந்திர –
னேபண்டு தந்தது.

[தேயம் – (இங்கே) வானவர் தேசம்.]

வில்லில் நாணேற்றி எழுப்புகிறுன். அது,

கூற்றி னுரையும்
ஆருயிர் கொள்வது

கவசம் பூண்டு, போரில் அணியும் அடையாளப் பூவையும் சூடிப் புறப்படுகிறுன் :

பற்றி னுன் ;கவ –
சம்படர் மார்பிடைச்
சுற்றி னுன் ;நெடுந்
தும்பையும் சூடினுன்.

[பற்றினுன் – பல படைக்கலங்களைப் பற்றிக் கொண்டான். படர் மார்பிடை – பரந்த மார்பை.]

தமிழ்ப் போர் வீரர்கள் பெருவீரச் செயல் காட்டிப் பகைவரோடு போர் புரியப் புறப்படுவதற்கு அறிகுறியான தும்பைப் பூவை ராவணனும் சூடிக் கொண்டானும்.

சற்றுப் பொறுங்கள். இப்போது ராவணனை எதிர்த்து வரும் ராமபிரானும்.

துளவொடு தும்பையும்
சுழியச் சூடினுன்

என்றுதான் கவி சொல்லப் போகிறுன்.

உண்மை என்னவென்றுல், கம்பனுடைய இராமாவதாரம் தமிழகத்திலே காவிரிக் கரையில் நிகழ்ந்ததுதான். கவிஞன் கண்ணெதிரே, தமிழ்க் கலைவாணி கண்ணுரக் கண்டு காட்ட, நடந்ததுதான் இத்தமிழ்ப் பெருமக்களின் பேரிதிகாசம்.